www.tamilarangam.net

# சுவடுகள்

SUVADUKAL

A Tamil Monthly from Norway

"சமுதாய விரோதிகளைப் போன்று
தமிழ்நாட்டில் வாழ்வதைவிட, இலங்கைக்குச்
சென்று செத்து மடியலாம்" என்ற நிலைக்கு
ஈழத் தமிழ் அகதிகள் வந்துவிட்டனர்.




## உள்ளே: தமிழகத் தபால்

இந்த இதழிலும்
நோர்வேத் தமிழ்க்
கவிஞர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நான் செத்துக் கனவு

மல்லாந்து கிடக்கின்றேன்.
செல்லடித்துப் பிரட்டிய
செத்தை வீட்டைப் போல்
நான் செத்து வீட்டில்.

அப்பிக் கிடக்கிறது
மூக்குறிஞ்சும் மூஞ்சிகளில்
முழுவதுமாய் விகாரம்.

இப் பீத்தல் பூமியில்
எனைப் பிதுக்கிப் போட்டவளும்
என்னுடன் போடப்பட்டவர்களும்
சுற்றியுள்ள சுற்றமும்
விழிக்குடத்து நீர் இறைக்க
விழலாய்க் கிடக்கின்றேன்.

என்னில் முழுவதும்
சிவப்பு நட்சத்திரங்கள்
வயிற்றிலும்,
பெரியதொரு நிலவு
சிவப்பாய்த்தான்.

மௌனங்களை
முண்டி விழுங்கிவிட்டு
வெத்திலை இரத்தம்
உறைந்த உதடுகள்
உரசத் தொடங்கிற்று.

சாமம் பூராவும்
ஊளையிட்ட நாய் பற்றியும்
விடியற் காலையில்
விழுந்து கத்திய காகம் பற்றியும்
தாங்கள் தாங்கள் கண்ட
கெட்ட கனவுகள் பற்றியும்
காதுகளைக் கடித்தனர்.

தறிந்து விழுகிறது
அடிவளவில் பூவரசு.
வேலியும் வெட்டிச்
சரிக்கப்படுகிறது.

கோடிக்குள் வைத்தொரு.
கொம்புப் பாடைக்கும்
உயிரூட்டப்படுகிறது.

பஞ்சடைத்துக் கிடக்கும்
நிலவு நட்சத்திரங்களெல்லாம்
நாற்றமடிக்கத் தொடங்கிற்று.

அவரவர் அலுத்தனர்.
"எல்லோரும் வந்தாச்சு
ஏனின்னும் எடுக்காமல் இருக்கினம்
சவத்தை"

ஆம்....
எல்லோரும் வந்தாச்சு.
எனது சாவிற்கு
என்னைத் தெரிந்தவர்கள்
எனக்குத் தெரிந்தவர்கள்
எல்லோரும்....

இருந்தும்;
நானின்னும் தேடியபடிக்குத்தான்
இன்னமும் வராத
மரணவிசாரணை அதிகாரிகளை.

எனது சாவு பற்றி
இல்லை;
நான் சாகடிக்கப்பட்டது பற்றி
ஒப்புவித்துப் போவதற்கு.

**வேலணையூர் நவமகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுவர்களின் கண்களில்.........

சர்வதேச ரீதியாக, குடும்ப வருடம் கொண்டாடப்படும் இவ்வேளை, ஒஸ்லோவில் உள்ள
சர்வதேச சிறுவர் கலைக் காட்சியகம் (Barnekunstmuseet) 130நாடுகளைச் சேர்ந்த 1200க்கு
மேற்பட்ட ஓவியங்களைக் காட்சிக்கு வைத்துள்ளது.

மூன்று வயதுமுதல் பதினெட்டுவயது வரையிலான சிறார்களது படைப்பாற்றலையும் கற்பனை
வளத்தையும், வெவ்வேறு தேசப் பின்னணியில் காண இது ஒரு அரிய சந்தர்ப்பமாக
அமையலாம்.


சிறுவர் பார்வையில் குடும்பம் என்று பொதுவான தலைப்பின் கீழ் இந்த ஓவியங்கள்
வகைப்படுத்தக் கூடியன. கடந்த இரு வருடங்களாகக் காட்சியகத்தின் நிர்வாகிகளான ற:பாய்ல்
கோல்டினும், (அவரது துணைவியாரான) அல்லா கோல்டினும் இந்த ஓவியங்களைச்
சேகரிப்பதில் ஈடுபட்டனர். அண்மையிற் காலமான ற:பாய்லின் இழப்பு, இந்தக்
காட்சியகத்திற்குப் பாரிய இழப்பெனினும் அவரது பணிகளைத் தொடர்ச்சியாக இடையூறின்றி
நடத்துவதில் காட்சியகம் காட்டும் ஆர்வம் இந்த ஓவியக் கண்காட்சியில் தெரிகிறது.

இந்தக் கண்காட்சிக்கான ஓவியங்களைச் சேகரிப்பதில் காட்சியகத்துடன் யுனெஸ்கோ
ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. பல்வேறு சூழலில், பல்வேறு விதமான எண்ணக் கருக்களை
ஓவியங்களாகப் படைத்திருக்கும் சிறுவர்கள், தங்கள் பார்வையில் குடும்பம் எப்படித் தெரிகிறது
எனப் படைத்துக் காட்டியுள்ள விதம் பாராட்டப்படக் கூடியது. ஆர்வமுள்ள அனைவரும்,
முக்கியமாகச் சிறுவர்கள் சென்று பார்க்கவேண்டிய ஒரு கண்காட்சி இது.

• உதயன்

● சென்னையில் இருந்து அதியமான்

# தமிழகத் தபால்



## கொஞ்சம்கூட மனிதாபிமானம் இல்லாமல் கல்நெஞ்சத்துடன் ஈழ அகதிகளைப் பார்க்கும் சோ

**நாளை இந்தியா**

அயோத்தியில் மசூதியைத் தரைமட்டமாக்கி சுவைகண்ட இந்துத்துவ வெறியர்கள், இப்பொழுது பாண்டிச்சேரியில் தமது அடுத்த வேட்டையைத் தொடங்கக் காத்திருக்கிறார்கள். இந்தமுறை இவர்களின் பசிக்குக் காத்திருப்பது மசூதி அல்ல; சர்ச். பாண்டிச்சேரியிலுள்ள ஒரு சர்ச்சின் சுவரில் பிப்ரவரி மாதத்தில் ஓம் என்று எழுதிவிட்டுச் சென்றனர் இந்து முன்னணியினர். பிறகு ஓம்முக்கு கற்பூர

கூறி மார்ச் முதல் வாரத்தில் பாண்டிச்சேரிக்கு மத்திய பாதுகாப்புப்

பாராளுமன்றத்தில் ஒலித்தது. உள்துறை மந்திரி சவான், "மீண்டும் ஒரு அயோத்தியை நாடு தாங்காது" என்று

படையை அனுப்பிவைத்தார். இந்துமுன்னணிப் புலியும் தீப ஆராதனையைத் தள்ளி வைப்பதாகக் கூறிப் பதுங்கிக் கொண்டது. இந்து முன்னணியின் இந்த அடாவடிச் செயலைத் திராவிடப் பாரம்பரிய வாரிசுகள்

போன்றவை ஈழத்தமிழர்களை இலங்கையை நோக்கி விரட்டிக் கொண்டிருக்கின்றன. வேண்டா வெறுப்பாக தாயகம் செல்ல விரும்புபவர்கள் இன்று எண்ணிக்கையில் அதிகமாகி வருகிறார்கள். வலுக் கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படும் அகதிகளுக்கு ஆதரவாக, ஈழ ஆதரவு அமைப்புகளும், ஈழ அகதிகள் அமைப்பும் கண்டனம் தெரிவித்தவுடன், சில மாதங்களுக்கு அகதிகளை அனுப்புவதைத் தமிழ்நாடு அரசு நிறுத்தி வைத்திருந்தது. இப்பொழுது அகதிகளை மீண்டும் அனுப்பத் தொடங்கியுள்ளனர். இது தொடர்பாக, மனித உரிமை பற்றியும் மனிதாபிமானம் பற்றியும் அதிகம் பேசும்

www.tamilarangam.net

ஆராதனைகள். அப்புறம் "இங்கே இருந்த சிலைகள் எங்கே?" என்று பிரச்சனையைக் கிளப்பி, "இந்தச் சர்ச்சில்தான் எங்களது வேதபுரீஸ்வரர் இருந்தார்; அவருக்கு நாங்கள் பூஜை செய்யப் போகிறோம். மார்ச் 10ம் தேதி தீப ஆராதனை நடைபெறும்" என்று எச்சரிக்கை செய்தது இந்து முன்னணி. பாண்டிச்சேரியின் காங்கிரசு அரசு திகிலடைந்துவிட்டது. கடப்பாரைச் சேவையில் கரைகண்டவர்களாயிற்றே அத்வானி கம்பெனியினர்! சும்மா இருப்பார்களா? பாண்டிச்சேரி முழுவதையும் கலக்கிவிட்டார்கள். இதன் எதிரொலி உடனடியாக டெல்லியின்



BIJOY GHOSH

கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அறிவாலயத்தை யாரும் இடிக்காமல் இருந்தால் சரி என்று கருணாநிதியும், தனது கல்லாப்பெட்டி உடையாமல் இருந்தால் சரி என்று ஜெயலலிதாவும், வல்லம் பெரியார் பெண் பொறியியற் கல்லூரியை இடிக்காமல் இருந்தால் சரி என்று கடலூர் வீரமணியும், கருணாநிதியே கண்டுகொள்ளாததை நாம் ஏன் கண்டுகொள்ள வேண்டும் என்று வை.கோ.வும் இருந்துவிட்டனர். ஆனால் அப்பாவித் தமிழன் மட்டும் நேற்று அயோத்தி, இன்று பாண்டிச்சேரி, நாளை இந்தியா(?) என்று அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

## நயவஞ்சக நாக்கு

"சமுதாய விரோதிகளைப் போன்று தமிழ்நாட்டில் வாழ்வதைவிட, இலங்கைக்குச் சென்று செத்து மடியலாம்" என்ற நிலைக்கு ஈழத் தமிழ் அகதிகள் வந்துவிட்டனர். அகதி முகாம்களில் உள்ள கட்டுப்பாடுகள், போலீசாரின் விஷமத்தனமான விசாரணைகள்

கேள்வி: இலங்கை அகதிகள் வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படுவதாகக் கூறப்படுவது பற்றி.......

சோ பதில்: அப்படித்தான் நடக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அப்படி நடந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை.

கொஞ்சங்கூட மனிதாபிமானம் என்பதே இல்லாமல் கல்நெஞ்சத்துடன் ஈழ அகதிகளைப் பார்க்கும் சோ, காஷ்மீரின் பார்ப்பன அகதிகளைப் பார்க்கும் பார்வையே தனி! ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினரால் தில்லிக்குத் துரத்தியடிக்கப் பட்டனர் காஷ்மீர் பார்ப்பனர்கள். இவர்களுக்கு தனி முகாம்கள் உள்ளன. மத்திய அரசும் பாரதீய ஜனதாக் கட்சியும் அள்ளிக் கொடுத்து அவர்களைப் பராமரித்து வருகின்றன. இவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் போதாது என்று கூறிவருகிறார் சோ. மேலும் காஷ்மீரில் அமைதி திரும்பிய பிறகுதான் பாப்பன அகதிகளை அங்கு அனுப்பவேண்டும் என்றும் எழுதி வருகிறார். இலங்கைத் தமிழனுக்கு ஒரு நீதி! இந்தியப் பார்ப்பானுக்கு ஒரு நீதி! எல்லாம் நயவஞ்சக நாக்கு செய்யும் வேலை.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



> "தமிழீழத்தை ஆதரிக்கிறேன். அதற்காக விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறேன் என்று சொல்லக்கூடாது"

உங்களால் (மத்திய அரசு) என்ன செய்யமுடியும்?" இது டாக்டர் ராமதாசின் உறுதியான பேச்சு.

வீரமணி? இதைப்பற்றி ஒரு வார்த்தை பேசுவது கிடையாது. ஆனால் இவரது கட்சித் தொண்டர்கள் இதை மட்டும்தான் பேசி வருகிறார்கள்.

"விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முறியடித்துவிட்டோம். அகதிகளைத் திருப்பி அனுப்பிவிட்டால் மாநிலம் முழு அமைதிக்கு வந்துவிடும்" இது ஜெயலலிதாவின் அமைச்சர்கள் பேச்சு.

எல்லாம் ஒரே மேடை. பல வேடங்கள். காட்சி மாறும்போது வேடங்களும் மாறுகின்றன.

## இரட்டை வாழ்க்கை!

அரசியல்வாதிகளுக்கு இரட்டை வாழ்க்கை உண்டு. பேசுவது ஒன்றாகவும், செய்வது ஒன்றாகவும் வாழ்பவர்கள் அவர்கள். இப்பொழுது இந்த இரட்டை வாழ்க்கை தமிழ் இலக்கியவாதிகளையும் பற்றிக் கொண்டதோ என்னவோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. விஷயம் கொஞ்சம் சீரியஸானது. தமிழில் அமைப்பியல்வாதத்தை அறிமுகப் படுத்தியவர்களில் நாகார்ஜனன், தமிழவன் விவாதித்துக் கொண்டது இதைத்தான். ஊருக்குத் தானடி உபதேசம், உனக்கில்லடி என்பது இதுதானோ!

## வேடங்கள் பலப்பல!

கடந்த காலங்களில் ஈழப் பிரச்சனையில், தமிழகக் கட்சிகள் என்னென்ன செய்தன; என்னென்ன பேசின என்பது யாவரும்


www.tamilarangam.net

www.tamilarangam.net

போன்று பேராசிரியர் முத்துக்குமாரசாமியும் ஒருவர். முத்துக்குமாரசாமியின் எழுத்துகள் இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்குமே நன்கு அறிமுகம். இரது துணைவியார் சுகந்தி மார்ச் மாதம் முதல்வாரத்தில் மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத்தானே தீயிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். இதற்குக் காரணம் வரதட்சணை என்று கூறப்படுகிறது. திருமணம் அன்றே தனக்கு ஒரு விலையுயர்ந்த கடியாரம் வேண்டும் என்று எம்.டி.முத்துக்குமாரசாமி கேட்டாராம். இவர் அமெரிக்காவுக்கெல்லாம் சென்று வந்ததைக் காட்டி, கல்லூரிக்கு செல்ல மாருதி கார் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். பல்வேறு விஷயங்களில்

வரதட்சணை பலவற்றைக் கொடுத்த சுகந்தி குடும்பத்தினர், மாருதி கார் வாங்குவதற்கு, சுகந்தியின் பெயரில் இருந்த ரூ.40,000ஐ எடுத்துத் தர மறுத்துவிட்டனர். இதைத் தொடர்ந்து வீட்டில் உண்டான குழப்பங்களில் சுகந்தி இறந்துவிட்டார். இலக்கியவாதி எம்.டி.முத்துக்குமாரசாமியைப் பொலிசார் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளனர். மார்ச் மாதத்தில் சென்னையின் இலக்கிய ஆர்வலர்கள் அறிந்ததுதான். தற்போது இவைகளெல்லாம் என்ன சொல்கின்றன?

"நான் என்றைக்குமே தமிழீழத்தை ஆதரிக்கவில்லை. இந்திரா காந்தி அம்மையாரும், எம்.ஜி.ஆரும் அதை ஆதரித்ததால் , நானும் அதைப் பற்றிப் பேசவேண்டிய கட்டாயத்தில் இருந்தேன்" இப்படி ராஜீவ் காந்தியின் கொலைச்சதி பற்றி விசாரித்துவரும் ஜெயின் கமிஷன்முன் அறிக்கை வைத்துள்ளவர் வேறுயாருமல்ல. உலகத் தமிழினத் தலைவர் என்று தன்னைத்தானே அழைத்துக் கொள்ளும் கருணாநிதிதான்.

"தமிழர்களுக்கு உரிமையுடன் கூடிய அமைதியான வாழ்க்கை ஒன்றுபட்ட இலங்கையில் கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன். அதேநேரத்தில் தமிழீழம் கிடைத்தால் என்னைவிட மகிழ்ச்சி அடைபவர் வேறு யாரும் இருக்கமுடியாது" என்று வெண்டைக்காய் விளக்கம் கொடுப்பவரும் சாட்சாத் கருணாநிதியேதான்.

"தமிழீழத்தை ஆதரிக்கிறேன். அது ஒரு வரலாற்றுக் கட்டாயம். அதற்காக விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறேன் என்று சொல்லக்கூடாது" இது வை.கோ.வின் நழுவல் பேச்சு.

"தமிழீழத்தையும் ஆதரிக்கிறேன்;

## இலவச இணைப்புகள்

தமிழ் நாளிதழ் வெளியிடும் இலவச இணைப்புகள் பெரும்பாலும் ஏனோதானோ தயாரிப்புகளாகத்தான் உள்ளன. ஆனால் தினமணியின் இலவச இணைப்புகளான தினமணி சுடரும், தினமணி கதிரும் பாதுகாக்கப்பட வேண்டிய அளவுக்குக்




கனமான விஷயங்களுடன் வெளிவருகின்றன. திரு.சுதாங்கனும், திரு.மாலனும் தினமணிக்கு ஆசிரியர்களாகப் பொறுப்பேற்றவுடன், இலவச இணைப்புகள் புதுப்பொலிவு பெற்றன. மாலன் எழுதிவரும் "அன்புள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இ இதழில்

தமிழன்" தொடர் அமெரிக்காவின் கனவு மயக்கங்களை நனவுலகுக்குக் கொண்டு வருகிறது. சுதாங்கனின் "சுட்டாச்சு, சுட்டாச்சு" தொடர் எம்.ஜி.ஆரைச் சுட்ட எம்.ஆர்.ராதாவின் செயல்களையும், அன்றைய அரசியல் போக்குகளையும் சுவாரஸ்யமாகப் பதிவு செய்து வருகிறது. இதுதவிர வாக்கப்பட்ட பூமி என்ற கிராமியத் தொடரும் அனைத்து வாசகர்களாலும் விரும்பிப் படிக்கப்படுகிறது. வாசகனை தினமணியுடன் பிணைக்கின்றன இந்த இலவச இணைப்புகள். வெற்றி மாலனுக்கும், சுதாங்கனுக்கும் உரியது.

### அரசியல்வாதிகள் = கொள்ளையர்கள்

ஒருவழியாகப் பூலான்தேவி தில்லி தீகார் சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகி விட்டார். எட்டு வருடங்களில் இவரது தண்டனைக் காலம் முடியவேண்டியது



ஆனால் அதிகாரிகள் மற்றும் அரசியல் சதுரங்கத்தில் காயாக்கப்பட்ட பூலான்தேவி, 11 ஆண்டுகள் கழித்து வெளியே வந்திருக்கிறாள். ஏற்கனவே மக்களைக் கொள்ளையடித்துப் பழக்கப்பட்ட அகில இந்திய அரசியற் கட்சிகள் அசல் கொள்ளைக்காரியான பூலான்தேவியை தத்தமது கட்சிகளில் சேர்த்துக் கொண்டு ஓட்டுகளை அறுவடை செய்யப் பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றன. பகல் கொள்ளைக் காரர்களைவிட அசல் கொள்ளைக்காரியை மக்கள் விரும்புகின்றனர் என்பதை சரியாகவே மோப்பம் பிடித்துள்ளன அரசியல் கட்சிகள். பாரதீய ஜனதா, காங்கிரஸ், ஜனதா தளம், சமாஷ்வாதி ஜனதா, பகுஜன் சமாஷ் கட்சி, ஜனதா கட்சி என்று எல்லாக் கட்சிகளுமே பூலான்தேவியை அணுகியுள்ளன. ஆனால் பூலான்தேவி இதுவரையும் மறுத்து வருகிறார். இருந்தும் உ.பி.யைத் தற்போது ஆளும் முலாயம்சிங் யாதவ் கட்சியில் (சமாஷ்வாதி ஜனதா) சேர்வார் என்று பேச்சு அடிபடுகிறது. இதற்கிடையே 1981ல் பூலான்தேவியால் படுகொலை செய்யப்பட்ட தாகூர் சாதியினர், அவளை எப்படியாவது கொலை செய்துவிட வேண்டும் என்ற வெறியுடன் தேடி வருகிறது. அரசியல் கட்சியில் சேர்ந்தால் தனக்கு முழுப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பூலான்தேவி இருப்பதாக அவரது வழக்கறிஞரே கருத்துத் தெரிவித்துள்ளார். இந்திய அரசியலில் ரவுடிகள், குண்டர்களின் ஆதிக்கம் தற்போது அதிகமாகவே உள்ளது. வருங்காலத்தில் கொள்ளையர்களின் ஆதிக்கமும் அதிகமாகலாம்!

● 16.03.94



www.tamilarangam.net

www.tamilarangam.net

அருவசிருங்காரன்

## தொங்கிச் சாகும் குருவிகள்

# தெற்கின் தேர்தலும் தமிழ் அரசியலும்



இலங்கையின் சுதந்திர வரலாற்றில் அதிக காலம் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்து வந்த ஐதேக அண்மையில் தென்மாகாணசபைத் தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்தித்தது. பாரம்பரியமாக இடதுசாரிக் கட்சிகளின் கோட்டையாக இருந்துவந்த தென்மாகாணத்தில் அண்மைய தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரை, தொகுதி ரீதியில் பார்ப்பின் ஒரேயொரு தொகுதியிலேயே (பிரேமதாசாவின் சொந்தத் தொகுதி எனப்படும் பலப்பிட்டிய) கட்சி வெற்றி ஈட்ட முடிந்தது. பகிரங்க மிரட்டல்கள், துப்பாக்கிச் சூடுகள், தாக்குதல்கள், கொலைகள் என்பவற்றுக்கு மத்தியில் நிகழ்ந்த இத்தேர்தலின் முடிவுகள் விஜேதுங்காவின் அரசியல் அணுகுமுறைகளுக்கும், கட்சிக்குள் நிகழும் குத்துவெட்டுகளுக்கும் கிடைத்த பரிசு எனக் கூறலாம். அடாவடித் தனங்களாலும், மோசமான சமூகநலத் திட்டங்களாலும் ஏற்பட்ட ஐதேக மீதான மக்களின் வெறுப்பு வாக்காக மாற்றப் பட்டதாகவும் கொள்ளலாம்.

கடந்த மாகாணசபைத் தேர்தல்களில் தென்மாகாண சபையில் எந்தக் கட்சிக்குமே அறுதிப் பெரும்பான்மை கிட்டவில்லை. எனவே முன்பு எதிரணியாக இருந்த காமினி - லலித் கோஷ்டி வாக்குகளும் (காமினி அரசில் சேர்ந்ததால்), (கட்சி மாறியதால்) அநுராவுக்கு ஆதரவான வாக்குகளும் இணைந்து தம்மைப் பலப்படுத்தி வெற்றி அடையச் செய்யும் என ஐதேக எதிர்பார்த்திருந்தால் அதில் ஆச்சரியம் இல்லை. இதைவிட இலங்கை வரலாற்றில் அதிக தடவை தொடர்ந்து வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்த நிதியமைச்சரான

www.tamilarangam.net

றொணி டி மெல் இம்முறை ஐதேகவுடதுன் இருப்பதும் ஒரு பலமாகக் கருதப் பட்டிருக்கலாம். ஆனால் ஐதேகவின் காலத்தில் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்ட எம்பிலிப்பிட்டிய மாணவர்களின் எலும்புக் கூடுகள் புதைகுழிகளில் இருந்து மீட்கப் பட்டமை, பிரேமதாசா போன்ற வாக்குகளை ஈர்க்கும் சக்தியுள்ள எவரும் கட்சியில் இல்லாமை, வறுமைக்கோட்டிலும் அதற்குக் கீழும் வாழும் ஏராளம் மக்களது வாழ்வுக்கு எந்தவித உத்தரவாதமும் வழங்கப் படாமை, கட்சிக்குள்ளேயே பிரேமதாசாவின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் வெளியில் தெரியும்படி நிகழ்ந்த குத்துவெட்டுகள், தென்மாகாணசபையில் ஆட்சியைக் கைப்பற்ற ஆட்கடத்தல் செய்தமை போன்று ஐதேகவின் தோல்விக்குப் பல காரணங்கள் இருந்தன.

தேர்தல் தோல்விக்குப் பின் இவ்வருடம் நிகழவுள்ள ஏனைய தேர்தல்கள் - முக்கியமாக ஜனாதிபதித் தேர்தல் பற்றிக் கட்சி கவலை கொண்டு நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்கிறது. அண்மைக் காலங்களாக முறுகல் நிலையில் இருந்த அரசு - தொண்டமான் உறவை மீளமைக்க ஐதேக முயல்கிறது. சிலகாலம் முன்பு, தொண்டமானின் விருப்பிற்காகவே சிறையில் அடைக்கப் பட்டிருந்தவரான மலையக மக்கள் முன்னணித் தலைவரான சந்திரசேகரனைத் திடீரென விடுவித்துத் தொண்டமானை எச்சரித்த அரசு, தொண்டமானுக்கு எதிராக இதொகாவுக்குள் பிளவை ஏற்படுத்த முயன்ற அரசு, இப்போது நிபந்தனை எதுவும் இல்லாமற் சரணடைந்தவர்கள் போல் நடப்பதாகக் காட்டிக்கொள்ள முயல்கிறது. தொண்டமானுடன் பேச்சுகள், கடிதத் தொடர்புகள் என்று மீண்டும் ஒட்டி உறவாடல் நிகழ்கிறது. முஸ்லிம் கொங்கிரஸின் தலைவர் அஷ்ரப் பதவி விலகக்கூடாது என்று அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டுப் பேச்சு நடத்தப் படுகிறது. சிறுபான்மை இனங்களிற் தங்கியிருக்கக் கூடாது என்ற விஜேதுங்காவின் நிலைப்பாட்டில் இருந்து தற்காலிகமாகவேனும் விலகவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தெற்கின் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளதாகக் கூறலாம். தென்னிலங்கை மக்களின் தப்பபிப்பிராயத்தைப் போக்கினால் வடக்கு கிழக்கு இணைப்புக்கூடப் பிரச்சனையான விடயமல்ல என்று பிரதமரே பகிரங்கமாகப் பேச நேர்ந்ததும் இந்தக் காரணத்தாலேயே.

இனவாதத்தை ஊக்குவித்து வளர்க்கும் விதத்திலும், வடக்கு கிழக்கின் நிலைமைகளைக் கணக்கில் எடுக்காமல் வெறும் பயங்கரவாதப் பிரச்சனை என்று ஓதியும் வந்த விஜேதுங்கா அரசியலுக்குக் கிடைத்த அடி, நேரடியாக இனவாதத்திற்குக் கிடைத்த அடி எனக் கொள்ளப்பட முடியாது. பதிலாக, இனப்பிரச்சனையைவிட முக்கியமாக (மோசமாகவும்) வாழ்க்கைப் பிரச்சனை எங்களுக்கு இருக்கிறது என்று சிங்கள மக்கள் கூறியிருப்பதாகக் கொள்ளலாம். பதினேழு வருட ஆட்சியில் நாம் அடைந்த வறுமை போதும், இனி வேண்டாம் என்று அவர்கள் எழுப்பிய எச்சரிக்கைக் குரலாகவும் கொள்ளப் படலாம்.

பிரேமதாசாவின் ஆதரவாளர்களை ஓரங்கட்டிவிட்டுத் தனக்குப் பிடித்தமானவர்களை அதிகாரத்திற்குக் கொண்டுவர ஜேஆர் எடுத்த முயற்சிகளும் தேர்தலின்பின் சிக்கல்ப் படுகின்றன. பிரேமதாசாவின் ஆதரவான வாக்குகளை இழந்துவிட்ட பயத்தில், இப்போது மீண்டும் அவரது வாக்குகளைக் கவரும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. பிரேமதாசாவின் ஆதரவாளர்களான காமினி பொன்சேகா, சிறிசேன குரே போன்றோரை


www.tamilarangam.net

ஏப்ரல் முதல் வாரத்தில் கொழும்பில் நிகழ்ந்த ஐந்து வெவ்வேறு குண்டுவெடிப்புகளில் ஒருவர் கொல்லப் பட்டதுடன், 15பேர் காயமுற்றனர். உல்லாசப் பயணிகள் அதிகமாகப் புழங்கும் இடங்களில் இந்தக் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன.

அரங்கில் இருந்து விரட்டிவிட்டு ஐதேக ஆட்சியை ஏற்படுத்த நினைத்த ஜேஆரின் ராஜதந்திரம் தற்காலிகமாகவேனும் பலிக்கவில்லை. பிரேமதாசாவைக் கௌரவிப்பதற்காக விசேட பூஜைகள் நடத்தப் படுவதுடன், அவர் இறந்த தினமான மேதினத்தைப் பாரிய அளவில் கொண்டாடாமல் தவிர்க்கிறது ஐதேக.

ஐதேகவின் தற்போதைய நிலையில் எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேர்வதற்கு அது ஆயத்தமாக இருந்தது என்றே கூறலாம். இந்த நிலையை ஐதேகவுடன் அல்லது சுதந்திரக் கட்சியுடன் பேரம் பேசும் நிலையில் உள்ள இதொகா, முஸ்லிம் கொங்கிரஸ் என்பன எப்படிப் பாவிக்கப் போகின்றன என்பதில் தமிழரது எதிர்காலமும் ஓரளவு அடங்கியுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியோ, தமிழ்க் கொங்கிரஸோ பேரம் பேசக் கூடியளவு செல்வாக்குடன் இல்லை. கொழும்பில் அரசுடன் தொங்கிக் கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்களுக்கு எந்தப் பேரத்துக்கான சந்தர்ப்பமும் இல்லை. அவர்களுக்குத் தமிழ் மக்களிடம் துளியளவும் ஆதரவு இல்லை என்பதால் பேரத்துக்கான தகுதியில்லை என்பது ஒருபுறமிருக்க, அவர்களுக்கு அரசுடன் தொங்குவதைத் தவிர வேறு போக்கிடமும் இல்லை. அவர்கள் தொங்கியே சாகப் பிறந்தவர்கள். ஒரு வித்தியாசம், ஆயுதத்துடன் தொங்குகிறார்கள்.

•






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடைசி ஆசை

**மைத்ரேயி**

மாரிகாலத்தில்
முழங்காலுக்கு மேல் நீர்நிறைந்த
அப் பதுங்கு குழியில்
அம்மா, நான், கணவன், குழந்தைகள்,
அகதியாய் வந்த அயற்கிராமத்தவர்கள்
இடம்போதாமையோ பயமோ
கட்டிப் பிடித்தபடி

அமாவாசை இருட்கருப்பில்
மின்னும் விண்மீன்களிடை
குண்டுவீசும் விமானங்களைக்
கண்குத்தத் தேடியபடி

மாரித்தவளைகளும்
கத்த மறந்த நிசப்தம்
மரணபயம் மட்டும்
பூதாகாரமாய்.

இருளுக்குக் கண்பழகச்
சற்றே பயந் தெளியும்
விமானங்களற்ற விண்வெளியில்
நட்சத்திரங்கள் தெளிவாக
சப்தரிஷி மண்டலம், கார்த்திகைப் பெண்கள், ......

கந்தனை வளர்த்த கார்த்திகைப் பெண்கள் -
நினைவூட்டும் கந்தர்சஷ்டி கவசம்
அம்மாவுக்குத் தெம்பு தரும் - எனக்கோ
சொல்லாமலே புதைந்துவிட்ட என்
பால்யக் காதலும்
மனதுள் தூதனுப்பிய
கார்த்திகைப் பெண்களும்
நினைவில் வரும்.

நீயும் அண்ணாவும் நண்பர்களும்
கிரிக்கெட் விளையாடி - நான்
பந்துபொறுக்கிய காலத்தில்
என் அகராதியில் காதல் என்ற சொல்
இல்லாதிருந்ததும் - அது
சேர்க்கப்பட்ட காலத்தில் - நீ ஊரில்
இல்லாமற் போனதும்

கார்த்திகைப் பெண்களை நாளாந்தம்
தூதனுப்பியதும் - உனக்காய்
அம்மன் கோவிலில் - நான்
நேர்த்தி வைத்ததும்

நான் வளர வளர்ந்த என் பகுத்தறிவு
அம்மனையும் உணர்ச்சிவயங்களையும் - என்
அகராதியிலிருந்து நீக்கிய பின்னரும்
அம்மன் கோவிலும் கார்த்திகைப் பெண்களும்
நினைவூட்டுமுன் ஞாபகங்கள் மட்டும்
மனதின் மென்மூலையில்

இன்னும் அழியாதிருப்பது
"அறிவின் வரையறையும், சமூகத்தின்
கட்டுப்பாடுகளும்
களங்கப்படுத்தமுன் கருக்கொண்ட
எனது 'முதற்காதல்' என்ற எண்ணக்கருவே"
என என் அறிவும்
"இல்லையில்லை
அதன் கருப்பொருளான
நீயே"
என என் உணர்வும்
முரண்பட ........

* * * * *

எனினும் எனக்கொரு ஆசை
சாகமுன் ஒருமுறையாவது
உன்னிடம் இந்தக்
கருப்பொருள் - எண்ணக்கரு
பற்றிக் கூற

காலில் ஏதோ ஊர்வதுபோல்
பாம்போ?
அருவருப்பில் உடல் நெளியமுன்
பயத்தில் இரத்தம் உறையும்.

விமானச் சத்தம்,
வாணவேடிக்கை -
குண்டுவிழும் திசையை,
தூரத்தைக் கணக்கிடலில்
பால்யக் காதல், பாம்பு
எல்லாம் மறந்து

மரணபயம் மட்டும்
பிரபஞ்சத்தை நிறைக்கும்
பூதாகாரமாய் !

- மார்கழி 1990 -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான தொடர்புக்கான தொலைபேசி இலக்கத்திற்குக் கடந்த வருடம், 6,500 அழைப்புகள் வந்துள்ளன. இது கடந்த வருடத்தைவிட 41% அதிகமாகும். சிறுவர், இளைஞர்கள் தமது பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ளவும், தேவையானபோது ஒருவருடன் தமது எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளவும் என நோர்வேச் செஞ்சிலுவைச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொலைபேசிக்கு 240 பெரியவர்களும் அழைப்பு விடுத்திருந்தனர். அழைப்பு விடுத்த மூன்றிலொரு பங்கு சிறுவர், இளைஞர்களது உரையாடல்கள் பாலியல், பருவமடைதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவே இருந்தன. வன்முறைகள், சகபாடிகள் தொடர்பான விடயங்களும் கணிசமானோரா




# நோர்வே வலம்

- ரோஜா

எடுக்கப்பட்டுள்ளன.

48பேர் இவர்களது தொலைபேசிகளுக்குப் பதில் தருகின்றனர்.

"நான் களவு எடுக்காவிடில் என் நண்பர்கள் தாக்குவார்கள் நான் களவு எடுத்தால் களவு எடுக்காத நண்பர்களைத் தாக்கலாம். களவு எடுத்தால் காவலர்கள் தாக்குவார்கள். என்ன செய்வது?"

"எனக்கு ஒரு நாய் கிடைத்திருக்கிறது, தெரியுமா?"

"நான் பருவமடைந்து விட்டேன், சுகவீன நாட்களில் ஏனைய சிறுவர்களைப் போல நான் விளையாடலாமா?"

இவை இந்தச் சிறுவர்களது சந்தேகங்களிற் சில.

ஒஸ்லோவின் பாடசாலைகள் இலையுதிர்காலத்தில் மீண்டும் திறக்கும்போது, பாடசாலைகளில் வெளிநாட்டு மாணவர்களது தொகை அரைவாசிக்கு மேற்படாது பார்க்க வேண்டுமென மாநகரசபையின் கல்விக்குப் பொறுப்பான சபை உறுப்பினர் குறுா பாலாஸ் கூறியுள்ளார். இது நடைமுறையிற் சாத்தியமே அற்றது என மாவட்டக் கல்வி அதிகாரி கூறியுள்ளார். தற்போது சில பாடசாலைகளில் (தொய்யன் 94%, ஹர்சிலப் 82%, லக்கி காதா 79%, மொல்லர் காதா 78%) வெளிநாட்டு மாணவர் மிக அதிக தொகையில் பயில்கின்றனர். இவர்களிற் பெரும்பாலோர் பாகிஸ்தான் நாட்டினர்.

பழைய காலத்தில் பனிப் பிரதேசங்களிற் போக்குவரத்துக்குப் பாவிக்கப்பட்ட நாய்வண்டிகள் இப்போது பெரும்பாலும் வழக்கிலில்லை. ஆனால் நாய்வண்டி ஓட்டம் சர்வதேச ரீதியில் பல ரசிகர்களை ஈர்க்கும் ஒரு விளையாட்டாக உள்ளது. பெப்ரவரி இறுதியில் ஜேர்மனியில் நிகழ்ந்த நாய்வண்டிப் போட்டிகளில் ஐந்து வெவ்வேறு வகையான பிரிவுகளில் மூன்று தங்கப் பதக்கங்களையும், நான்கு வெள்ளி, இரு வெண்கலப் பதக்கங்களையும் நோர்வே தனதாக்கி முதன்மை நாடாக வெற்றிபெற்றது.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2000 நாய்களுடன் 300 பேர் இந்தப் போட்டிகளில் பங்கெடுத்தனர்.

அல்கஹோல் பாவனையால் அதிக பெற்றோர் இறப்பது, ஒஸ்லோவின் கிழக்கு மையப் பகுதியிலேயே எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஒஸ்லோவில் உள்ள 7000 குழந்தைகள், சிறுவர்களது பெற்றோர் மிக அதிகளவில் அல்கஹோல் பாவிக்கினறனர். ஒப்பீட்டளவில் சோண் ஓ ஃபியோடான மாவட்டத்திலேயே பெற்றோர் மிகக் குறைவாக அல்கஹோல் அடிமைகளாக உள்ளனர்.

படம் பார்க்க அனுமதிக்கப்படும் வயதுக் கட்டுப்பாடுகள் விரைவில் மாற்றப்படலாம். தற்போதுள்ள 5, 10, 15, அனைவரும் என்ற வயதுக் கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக, 7, 11, 15, 18, அனைவரும் என்ற வயதுக் கட்டுப்பாடு விரைவில் நடைமுறைக்கு வரலாம். இதுபற்றிக் கலாசார அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

பொது இடங்களிலும் (முக்கியமாகச் சுவர்களில்), பொதுப் போக்குவரத்துச் சாதனங்களிலும் வண்ணங்கள் தீட்டி அவற்றை அசிங்கப்படுத்தும் இளைஞர் குழுக்களுக்கு எதிராக ஒஸ்லோ மாநகரசபை பல நடவடிக்கைளை எடுத்துள்ளது. இவற்றில் ஒன்று, ஒரு சாதாரண பஸ்ஸை இவ்வாறு மோசமான முறையில் வண்ணம் தீட்டி நகருக்குள் பொதுமக்கள் பாவனைக்கு விடுவது. இந்த பஸ்ஸைப் பார்ப்போர் சுவரோவியங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் உதவுவர் என ஒஸ்லோ மாநகர முதல்வர் நம்புகிறார். குறிப்பிட்ட பஸ் (இரு வாரங்களுக்கு) நகரின் மையப் பகுதியில் பாவனையில் உள்ளது.

கடந்த வருடம் நோர்வேயில் 34,791 வெளிநாட்டவர்களுக்கு வேலைஅனுமதி (arbeidstillatelse) வழங்கப் பட்டுள்ளது. இது கடந்த வருடத்தைவிட 50வீதம் அதிகம். இவர்களில் கிழக்கு ஐரோப்பியர் தொகையே அதிகம் (16,692) மேற்கு ஐரோப்பியர் 7,773. ஆசியர் 5244. ஆபிரிக்கா/ மத்தியகிழக்கு 2402. வட அமெரிக்கர் 2008. தென்னமெரிக்கர் 620.

இதில் 13852 அனுமதிகள் ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதிகளின் புதுப்பித்தல்கள்.

நோர்வே புகைப்படக் கலைஞர்கள் சங்கம் அண்மையில் தனது நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடியது. இதனையொட்டிய இரு புகைப்படக் கண்காட்சிகள் ஒஸ்லோ நகர மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டன. இவ்வருடத்தின் சிறந்த புகைப்படத்திற்கான போட்டியில் பங்கேற்றுத் தெரிவான 68 புகைப்படங்கள் ஒரு காட்சியாகவும், கடந்த வருடங்களில் பரிசுபெற்ற புகைப்படங்கள் இன்னொரு காட்சியாகவும் ஒழுங்கு செய்யப்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டுள்ளன. 1894ல் கிறிஸ்டியானியாவில் (ஒஸ்லோவின் பழைய பெயர்) புகைப்படக் கலைஞர்கள் சங்கம் ஆரம்பிக்கப் பட்டது.

கடந்த வருடம் நாடு முழுவதுமுள்ள வேகக் கண்காணிப்பு வீடியோக் கமராக்களால் 27,565 வாகனங்கள் அதிவேகத்திற்காகக் கவனிக்கப்பட்டன. இவற்றின் சாரதிகளில் 385பேர் தமது சாரதிய அனுமதிப் பத்திரங்களை இழந்தனர். ஏறத்தாழ 27 லட்சம் குறோணர்கள் அபராதத் தொகையாக விதிக்கப் பட்டது.



, *Terje Rød Larsen,*

அண்மையில் இஸ்ரேலுக்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைகளில் சமரசம் ஏற்படுத்த நோர்வே இருதரப்பினராலும் அழைக்கப் பட்டுள்ளது. ஒஸ்லோ ஒப்பந்தத்தில் மிக முக்கிய பங்கு வகித்தவரும் வெளிநாட்டமைச்சின் விசேட ஆலோசகருமான ரெர்ய லார்சன் (Terje Rød Larsen) இது தொடர்பாகப் பேச நேரடியாக இருதரப்பினராலும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளார்.

பியூண் என்ற இடத்தில் பாலர் பாடசாலை ஒன்றில் குழந்தைகளைப் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்தினார் என்ற சந்தேகத்தில் கைதான 44 வயதுக்காரர், குற்றமற்றவர் என்று யூரிகளால் விடுவிக்கப் பட்டது நினைவிருக்கலாம். இந்த விசாரணையில் குழந்தைகளது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட வீடியோ நாடாக்கள் வழக்கு முடிந்தபின் களவாடப் பட்டன. களவெடுத்தவர் இவற்றை ஒரு தொலைக்காட்சி நிலையத்திற்கு விற்க முயன்றபோதே களவு அம்பலமானது. எவரும் அவற்றை வாங்க முயலாததாலோ என்னவோ அந்த வீடியோக்கள், திருடனால் வீதியோரமாகச் சில நாட்களின் பின் வீசப்பட்டன.

## வாசகர்கள் கவனத்துக்கு!

இந்த இதழில் இடம்பெற்றிருக்க வேண்டிய சில படைப்புகள் இடம்பெறவில்லை. மன்னிக்க வேண்டுகிறோம். அடுத்த இதழில் இப்படைப்புகள் இடம்பெறும்.

– சுவடுகள் –

பாடசாலைகளின் 'பாண்ட்' அணிகளில் விரைவில் பல நிறத்தவரையும் காணலாம். வெவ்வேறு பாடசாலை மாணவர் அணிகளும், முக்கியமாக வெளிநாட்டவர் அதிகமாக வாழும் ஒஸ்லோவின் நகர்மையப் பகுதிப் பாடசாலை அணிகள் – இதற்கான பயிற்சிகளை ஏற்கனவே தொடங்கிவிட்டன.

நோர்வேயில் புதிதாகவும் முதன்முறையாகவும் வெளியிடப் படவுள்ள 200 குறோணர் தாள்களில், நோர்வேஜிய மொழியின் இரு வடிவங்களும் (Nynorsk, Bokmål) பதிப்பிடப்பட உள்ளன. புதிய தாள்கள் வசந்த காலத்தில் அல்லது கோடைகாலத்தில் பாவனைக்கு வரும்.

அகதிகள் தொடர்பான நோர்வே அரசின் கொள்கைகள், நடைமுறைகள் தொடர்பான செய்தி மடல் ஒன்று விரைவில் வெளிவர உள்ளது. குடிவரவுத் திணைக்களம் (UDI), மாநகரசபைகள் திணைக்களம் (Kommunal departementet), நீதித்திணைக்களம் என்பனவற்றின் இணைந்த செயற்பாடாக வெளிவரும் இந்த மாதமிருமுறை இதழின் படைப்புகள் அரச அதிகாரிகள், திணைக்களங்களின் அரசியல் தலைவர்களாலும் எழுதப்படும். அரசியல்வாதிகள் மற்றும் பத்திரிகைகளை முக்கிய வாசகப் பரப்பாகக் கொண்டு வரவுள்ள இந்த இதழின் பக்கங்கள் நான்கு மட்டுமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்த வருடம் ஒஸ்லோவில் திருடப்பட்ட 6806 கார்களில் 516க்கு என்ன நடந்தது என்பது இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் (268) பாதிக்குச் சற்றுக் குறைந்தவைக்கும் என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. கடந்த வருடம் ஒஸ்லோ வாகனத் திருட்டுகளின் மொத்தப் பணப்பெறுமதி நான்குகோடி குறோணர்களுக்குச் சற்று மேல். நோர்வே முழுவதும் கடந்த வருடம் 20,000க்கும் அதிகமான கார்கள் திருடப் பட்டுள்ளன.

வலதுசாரிக் கட்சியின் (Høyre) தலைவி காஸி குல்மான் ஃபீவ (Kaci Kullmann Five) உத்தியோக பூர்வமாகத் தனது பதவியை, யான் பெத்தர்சனிடம் அண்மையில் கையளித்தார். கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையிலிருந்த வலதுசாரிக் கட்சியின் தேர்தல் படுதோல்விக்குப் பிறகு ஃபீவ தனது பதவியைத் துறந்திருந்தார்.

* புதிய,
200 குறோணர் தாள்
* சுவரோவியம்
* நாய் வண்டி ஓட்டம்
* பிழூன் வழக்கிற்குப் பின்

நோர்வேஜியத் தேசியத் தொலைக்காட்சி (NRK) எதிர்வரும் காலங்களில் நிகழ்ச்சிகளில் பெண்களின் நேரடிப் பங்களிப்பைக் குறைந்தபட்சம் 40%வரை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. நிகழ்ச்சிகளிற் பங்கேற்கக்கூடிய பெண்களின் உயர்கல்வி, தொலைக்காட்சி அனுபவங்கள் போன்ற தகவல்களைத் திரட்டி ஒரு கணனித் தகவல் மையம் (database) ஏற்படுத்தப்பட உள்ளது. முக்கியமாகத் துறைசார் ஆய்வாளர்கள், அறிஞர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப் படுகின்றன.

## எரியும் வண்ணங்கள் – புகழேந்தி ஓவியங்கள்

### "மக்களைச் சென்றடைகிறபோதே கலை முழுமையடைகிறது"

தமிழகத்தின் சிறந்த, சமூகப் பிரக்ஞை உள்ள ஓவியர்களில் ஒருவரான புகழேந்தியின் ஓவியங்கள் விரைவில் நூலுருப் பெற உள்ளன. பெரும் தொகையான பணம் தேவையான இத்திட்டத்தில் ஓவியக்கலை வளர்ச்சியில் ஈடுபாடுள்ள அனைவரும் பங்களிப்பது அவசியம். இதன்மூலம் எம்மிடையே அதிகம் கவனிக்கப்படாத ஓவியத் துறையின் வளர்ச்சிக்கு எம்மால் சிறிதளவிலாவது உதவலாம்.

இந்த நூலுருத் திட்டத்திற்கு உதவுமாறு தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்கள், ஓவியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆதிமூலம், வீர.சந்தானம், மருது, எஸ்.வி.ராஜதுரை, அப்துல் ரகுமான், பிரபஞ்சன், இன்குலாப் உட்பட அனேக கலைஞர்கள், படைப்பாளிகள் இணைந்து இவ்வாறானவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுவடுகள் வாசகர்களை இயன்ற உதவிகளை வழங்க வேண்டுகிறோம்.

தொடர்புகள்: தாமரைச்செல்வி பதிப்பகம்,/ 31/48 இராணி அண்ணா நகர்,/ சென்னை 78.

www.tamilarangam.net



# எஸ்.பொ.வின் கதைகள்

## அவா

எஸ்.பொன்னுத்துரை,
குறுநாவல், சிறுகதைத் தொகுப்பு,
மித்ர வெளியீடு,
சென்னை 1993

எஸ்.பொ. எனப் பலராலும் அறியப்பட்டவரான எஸ்.பொன்னுத்துரை எழுதிய வேறுபட்ட நீளங்களையுடைய ஏழு கதைகளின் தொகுதி இது. கதைகளின் நீளங்கள் போன்று அவை எழுதப்பட்ட காலங்கள் மட்டுமன்றி அவை குறிக்குங் காலங்களும் வேறுபடுகின்றன. எனினும் எஸ்.பொ.வுடைய எழுத்துநடை அன்றுபோலவே இன்றும் உள்ளது எனலாம்.

கதைகள் பெரும்பாலும் நிசமான மனதர்கள் பற்றியனவும் நிசமான சம்பவங்களதும் அடிப்படையானவை. (இது நிசமான சித்தரிப்புக்கு உத்தரவாதமில்லை). நீளமான மூன்று கதைகளில் இரண்டு (சுவடு, ஆகுதி) பௌத்த பிக்குக்களின் பாலியல் நடத்தை தொடர்பானவை. முன்னையது சமகாலத்துக்குரியது. அறியாப் பிராயத்திற் புத்தபிக்குவாகிக் காவிபூண்ட ஒருவன் ஒரு விபசாரியினிடம் கொண்ட மோகம் முடிவில் அவனை இல்லற வாழ்விற்கு உந்துவதைச் சித்தரிக்கும் இக்கதை மதபீடத்தின் உச்சமட்டங்களில் உள்ள முரண்பட்ட நியாயங்களையும், பம்மாத்துக்களையும் தொட்டுக்காட்டும் அதேவேளை அந்தப் பிக்குவின் பாலுணர்வின் எழுச்சியையும் செயற்பாட்டையும் அனுதாபத்துடனேயே சித்தரிக்கிறது. அவ்விபசாரி அவனுக்கு வழிகாட்டிய குருத்தினி'யாக அமைகிறாள். மற்றையது கண்டி அரசின் அதிகாரப் போட்டியில் பௌத்த மதபீடத் தலைமையின் செயற்பாட்டை விவரிக்க முனைகிறது. வரலாற்றுப் பின்னணி போர்த்துக்கேயரின் வருகைக்குப் பிற்பட்ட காலமாகும். இங்கே பெரிய பிக்குவின் திரைமறைவிலான செயல்கள் சித்தரிக்கப் படுகின்றன. அதிகார வெறியும், வஞ்சகமும் காமமிகுதியும், கொலை பாதகமும் ஒருங்கிணைந்த பெரிய பிக்குவின் சூழ்ச்சிகளில் அவரது கருவியாகச் செயற்பட்ட ஒரு பெண் அவர் கற்பித்த பாடத்தை அவர்மீதே பிரயோகித்துத் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தும் கதை. வரலாற்றைத் திகிலூட்டுஞ் சம்பவங்களாகவும் தனிமனித சூழ்ச்சிகளதும் சூரத்தனங்களதும் தொடராகவே காணப் பயிற்றப்பட்ட நமது சினிமா, (கல்கி, சாண்டில்யன் மரபில் வந்த) சரித்திர நாவல்களின் போக்குடனான ஒரு உடன்பாடு இயல்பாகவே தென்படுகிறது. ஒரே ஒரு முக்கியமான வேறுபாடு: எஸ்பொவின் எழுத்து ஆளுமை.

மூன்றாவது நீளமான கதையான அவா, கதையமைப்பிலும் கதைகூறும் முறையிலும் பிற கதைகளிலும் பார்க்க உயர்ந்து நிற்பது. அற்பாயுளில் மரிக்கும் சீடனுக்குக் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தைமூலம் அவர் அவர் வாழ்ந்த காலத்தில் ஒதுக்கச் சொன்ன பாலுறவு அனுபவத்தை வழங்க முற்படும் சமகால ரிஷி'யின் கதை. பலவேறு முயற்சிகளின் தோல்வி முடிவில் குருவின் துரோகத்தால் விபசாரியான ஒரு பெண்ணிற்குப் பிறந்து விபசாரியான அவரது மகளின் மகனிடம் அவரைக் கொண்டு செல்கிறது. அவரது மகளிடம் சீடன் (முதல்நாள் இறந்த ஒருவனின் உடலுட் புகுந்து) அனுபவித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறவின் விளைவாக அவரது மகளும் பேரனும் பிரிகின்றனர். பேரன் அவரது சீடனாகிறான். இங்கு குருவின் ரிஷிமூலம்' மட்டுமன்றிப் பொய்மையும் ஆணவமும் கலந்த போதனைகளும் நம்முன் விரிக்கப் படுகின்றன.

மூன்று நீண்ட கதைகளும், துறவுக்கும் மனித இயல்பு சார்ந்த பாலுணர்வின் வலிமைக்குமான முரண்பாட்டை மையமாக்கி, அம்முரண்பாட்டின் விளைவாகப் பொய்வாழ்வு வாழநேரும் மனிதர்கள் பற்றியன எனின், சில நேரங்களிற் சில தோழர்கள்' ஒரு அரசியல்வாதியின் கதை. இரண்டு நாட்குறிப்புகளின் பாங்கில் எழுதப் பட்டிருக்கும் இக்கதை எவரைப் பற்றியது என்பதை மறைக்க எஸ்பொ முயலவே இல்லை எனலாம். சில உண்மைகளுடன் தனது விருப்பு வெறுப்புச் சார்ந்த சம்பவங்களையும் இணைத்துக் கதைகூறும் எஸ்பொ தனது அரசியற் கோபதாபங்களை அதிகமாகவே வெளிப்படுத்தும் கதை இது. கதைக்குரியவர்கள் ஒரு இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த மேயரின் மனைவியும் ஒரு இடதுசாரி அரசியற் தலைவருமாவர். நோய்வாய்ப்பட்ட மேயர் சாகுமுன்பே அவரது நண்பரான அரசியல்வாதிக்கும் ஏற்படும் நெருக்கம் பற்றிய கதையில் கலாசாரப் புரட்சியின் காலமும் கம்யூனிஸ்ட் கட்சியின் உடைவின் காலமும் குழப்பப்படுவது ஒருபுறமிருக்க, எஸ்பொவின் தாக்குதலுக்கு இலக்காகும் அரசியல்வாதியிடம் இல்லாத குறைபாடுகளும் அரசியல் நிகழ்வுகளின் விஷமத்தனமான திரிப்புக்களும் வம்பளப்பு எழுத்தாளர்கட்கே உரிய நேர்த்தியுடன் சிருஷ்டிக்கப்பட்டு வழங்கப் படுகின்றன.

சுழி', பாடசாலை ஆசிரியர்கள் பற்றி நமது மரபில் உள்ள மதிப்பீட்டுக்கு முரணாக ஆசிரியர்களது நிஜவாழ்க்கை அமைந்துள்ளமை பற்றிய ஒரு சித்தரிப்பு. இது யாரைக் கருத்திற் கொண்டு அமைந்ததோ எனக்குத் தெரியாது. யானைக்கதை' ஒரு அரசியற் கிண்டலான குட்டிக்கதைப் பாங்கில் அமைந்துள்ளது. கதை யார்யாரையெல்லாம் தாக்க முனைகிறது என வாசகனுக்கு விளங்க வேண்டும் என்ற ஆவலில் வாசகனுக்கு ஒரு விளக்கத்தையும் தந்துள்ள எஸ்பொவை நினைக்கப் பரிதாபமாகவே இருந்தது. மற்றப்படி, இன்று வரும் கிண்டற் கதைகளுடன் ஒப்பிடுகையில் நன்றாகவே எழுதப் பட்டுள்ளது.

`Adieu' அவுஸ்திரேலியாவிற் குடியேறிய மகளுடன் வாழப் புலம்பெயரும் ஒரு முதியவரின் கதை. கொழும்பில் வசதியாக வாழ்ந்த இந்த முதியவர் மகளிடம் சென்றபோது இருந்த எதிர்பார்ப்புக்கள் அவளது வாழ்க்கை முறையால் ஏமாற்றத்துக்கு வழிகோலுகின்றன. கொழும்புக்குத் திரும்புமுன் விமான நிலையத்திற் தன் கதையை ஒரு இளம் நண்பருக்குக் கூறுவதாகக் கதை அமைகிறது. இக்கதையில் எஸ்பொவின் அனுதாபம் தமிழரது மரபுசார்ந்த வாழ்க்கை முறையை அவுஸ்திரேலியாவிலும் தமிழர்கள் தொடர வேண்டுமென்ற கொள்கையுடனேயே ஒட்டி நிற்கிறது. கிழவர் மூலம் வெளிப்படுத்தப்படும் "புதிய பறங்கிக் குட்டிகளுக்குத் தாத்தா என்று சொல்லிக் கொண்டு வாழாமல் பிறந்த மண்ணில் தமிழனாகச் சாகிறது கௌரவமானது" என்பன போன்ற கருத்துக்கள் பல. ஈழத் தமிழ்ச் சமுதாயத்தின் அந்நிய மோகத்தின் தோற்றுவாய் அவரது அனுதாபத்திற்குரிய கிழவரது வர்க்கத்தின் சமுதாயப் பார்வை என்பதை எஸ்பொ எங்கேயோ தவற விட்டுவிட்டார்.

அதனிலும் முக்கியமாகப், பாலுணர்வு பற்றி நிறைய எழுதுகிற எஸ்பொவின் எழுத்தில், பெண்கள் ஆணினத்தின் பாலியல் நுகர்பொருளாகக் கொள்ளப் படுவதை மறுக்கும் முனைப்பைக காண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியாமலுள்ளது. இந்த இடத்திற்தான் தி.ஜானகிராமன் சமுதாயம் தகாத உறவுகள் என வெறுத்தொதுக்குவனவற்றைப், பெண்களின் உணர்வுகள் பற்றி ஓரளவு அனுதாபத்துடனும், மென்மையுடனும், எழுதுவதை நினைவுகூர்வது அவசியமாகிறது. பாலுணர்வையும் பாலுறவையும் அங்க அவயவ வர்ணனைகளையும் விட முக்கியமான ஒன்று: மனித உறவுகள் பற்றியது. இதைக் கையாள்வதற்கு அவசியமான நுண்மையான உணர்வுகளை என்னால் எஸ்பொவின் எழுத்திற் காண முடியவில்லை.

எஸ்பொ தன்னுடைய கதைத் தலைப்பை நியாயப் படுத்தக்கூடக் கணேசலிங்கன் மீதும் ஜெயகாந்தன் மீதும் தாக்குதல் தொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம், அவரது சமுதாயப் பார்வைமீது அவரது தனிமனிதவாதம் செலுத்தும் ஆதிக்கத்தின் விளைவுதானோ தெரியவில்லை. தன்னை ஒரு கம்யூனிஸ்டாகவே காட்ட விரும்பும் எஸ்பொவின் எழுத்து அவரை அவ்வாறு காட்டுகிறதா என்பது ஒரு நல்ல கேள்வி. அரசியலை அவர் தனிமனிதர்களாகவே காண்கிறார். அந்தளவில் முதலாளித்துவ, நிலமான்ய சமுதாய அரசியல் வரலாற்றியலாளர்களின் பாதையிலேயே அவரும் பயணிக்கிறார். அண்மையில் மா ஓ சேதுங் ஒரு கொலைகாரன், காமுகன், நரமாமிச உணவை ஊக்குவித்த ஒரு வெறியன்' என்றவாறான ஒரு சித்திரம் மா ஓ நூற்றாண்டு தினத்திற்குச் சில வாரங்கள் முன்பு பிபிஸியில் ஒளிபரப்பானது. அங்கு உண்மைகளும் ஊகங்களும் கலந்தன, தனிமனிதர் மீதான அவதூறுகள் இடதுசாரிச் சிந்தனை மீதான அஸ்திரமாகியது. ஏனோ, எஸ்பொவின் அவா' தொகுதியை வாசித்த பின்பு அந்த நிகழ்ச்சியே மனதில் நின்றது.

சமகாலத் தமிழ் எழுத்தின் முனைப்பினின்று ஒதுங்கி ஓரளவுக்கு மரபை நாடிநிற்கும் எஸ்பொவின் எழுத்து நடை இன்று நான் வாசிக்கும் பல ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் சோர்வான எழுத்து நடைக்கு மத்தியில் ஒரு விறுவிறுப்பை ஏற்படுத்துகிறது. எனினும் அவரது சொற்பிரயோகம் அவரது சொல்வளத்தின் பூரணமான பயன்பாட்டை வேண்டியோ என்னவோ வழக்கொழிந்து போகும் சொற்களைக் கணிசமாகவே உள்ளடக்குகிறது. சில இடங்களில் மிக எடுப்பான மரபு சார்ந்த மொழிநடையின் நடுவே நவீனத்துவத்தின் கொச்சை வந்து இடறுகிறது. (இது அடிக்கடி நிகழும் ஒன்றல்ல). எழுதுகிற வேகத்தில் உதாரணமாக

"இந்த மோடன்கள் எங்கட பழமொழியைக்கூட மறந்துபோனார்கள். காகம் உயரப் பறந்தாலும் அன்னமாக மாட்டாது"

என எழுதுகிறார். இங்கே பேச்சுமொழியில் ஒரு சிறு இடறல்: "மோடன்கள் .... போனாங்கள்" என்று வரக்கூடுமேயொழிய "போனார்கள்" என வராது. அதைவிட, நமது பழமொழி,

"உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது" என்றுதான் நினைவு.

அன்னத்தை உயரப் பறப்பதுடன் நமது மரபிற் சேர்த்துக் கருதுவதாக நினைவில்லை. எஸ்பொ இத்தகைய சில பிசிறுகளையும் தவிர்த்திருக்கலாம்.


"(தமிழ்)மொழி மீது (எஸ்பொவின்) ஆளுமையே அவரது அதியுயாந்த வலிமையாகும். இடையிடையில் அதுவே அவரது பலவீனமுமாகும்" என்று ஏ.ஜே.கனகரத்னா 1968ம் ஆண்டு எழுதிய வரிகளும் அவா' நூலில் உள்ளடங்கியிருப்பதை இவ்விடத்துக் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

**சி.சிவசேகரம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

# விருதுபெற்ற தமிழ் அமைப்பு

**● குறவன்**

பேர்கன் மாநகரசபையால் வருடாவருடம் 'சிறந்த குழந்தைகள் - இளைஞர்களுக்கான பரிசு' (Barn og Ungdom Pris) வழங்கப்படுவது வழக்கம். குழந்தைகள், இளைஞர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திச் சிறந்த முறையில் இயங்கும் ஸ்தாபனத்திற்கு இப்பரிசு வழங்கப் படுவது வழக்கம்.

1993ம் ஆண்டுக்கான இப்பரிசை பேர்கன் ஈழத்தமிழர் விளையாட்டுக் கழகம் தட்டிக் கொண்டது. கழகத்தின் தலைவர் திரு.யூஜின் செபஸ்தியன் கழகத்தின் சார்பில் மார்ச் ஆறாம் திகதி பெற்றுக் கொண்டார். 40 கழகங்கள் விண்ணப்பித்த இந்தப் பரிசுக்கான போட்டியில் 14 கழகங்களே முன்னணியில் தெரிவாகின. இறுதித் தெரிவில் ஈழத்தமிழர் விளையாட்டுக் கழகம் பரிசுக்குத் தகுதியானதாகத் தெரிவானது.

1985ல் ஆரம்பிக்கப்பட்ட ஈழத்தமிழர் விளையாட்டுக் கழகம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் பல்வேறு வேலைகளைத் திறம்படச் செய்து முடித்துள்ளது. தமிழ் மக்களிடையே நிலவிவரும் அரசியல் மற்றும் சமூக முரண்பாடுகளுக்கு அப்பால், குடிபெயர்ந்து வாழும் தமிழ் இளைஞர்களிடையே நல்லுறவை வளர்ப்பதிலும், ஒன்றிணைந்து செயற்படுவதை நடைமுறையில் கடைப்பிடிப்பதிலும் கழகம் குறிப்பிடத் தக்களவு வெற்றி கண்டுள்ளது. இளைஞர்களிடம் மட்டுமன்றி சிறுவர்கள் முதியோர்களுக்கான விளையாட்டுகளை ஒழுங்கு செய்வதன் மூலம் வயதெல்லைக்கப்பால் புரிந்துணர்வையும், சமரசத்தையும் வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது.

கழகம் கோடைகால விடுமுறையில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், சிறுவர்க்கான மெய்வல்லுனர் போட்டிகளையும் குளிர்காலத்தில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றையும் வருடாவருடம் நடத்துவது வழக்கம். இவைதவிர, நோர்வேஜியர்களால் நடத்தப்படும் சுற்றுப் போட்டிகளில் தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்து கழகம் பங்குபற்றி வருவதை ஈழத்தமிழர் சங்கம், தேன்தமிழோசை வானொலி என்பன வெகுவாகப் பாராட்டின.

இப்போட்டிகளில் பேர்கன்வாழ் தமிழ்க் குழுக்கள் மட்டுமன்றி ஸ்தவாங்கர், ஒஸ்லோ, துரண்ஹைம், புளூரா ஆகிய இடங்களில் உள்ள குழுக்களும் பங்குபற்றுவது குறிப்பிடத் தக்கது. கடந்த கோடை விடுமுறையின் போது ஒஸ்லோவில் இருந்து வந்திருந்த சிங்கள, முஸ்லிம் இளைஞர்களைக் கொண்ட அணி மிகவும் வரவேற்பைப் பெற்றது.

பேர்கன் மாநகரசபையின் சார்பில் பரிசை வழங்கிய பெண்மணி தனது உரையில், இன முரண்பாடுகளுக்கு அப்பால் தமிழ் சிங்கள முஸ்லிம் இளைஞர்களை ஒன்றிணைத்து கழகம் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டினார்.

கழகமானது தனது பத்தாண்டு நிறைவை அடுத்த வருடம் கொண்டாடவிருக்கும்வேளை, கழகத்தின் கடந்த ஒன்பது வருடச் செயற்பாட்டுக்கு இப்பரிசில் எடுத்துக் காட்டாகும். இன்று தமிழ் மக்களிடையே நிலவிவரும் வேறுபாடுகள் எதிர்காலம் பற்றிய ஏக்கம் என்பவற்றுக்கு மத்தியில் மனிதநேயத்தை மட்டும் அடிப்படையாக வைத்து இளைஞர்களது திறமையை வெளிக்கொணரும் பணி மகத்தானது. இக்கழகத்தின் கடந்த் ஒன்பது வருட வளர்ச்சிப் பணியில் பங்காற்றிய அனைவருமே உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள். கழகம் தனது பணிகளில் தொடர்ந்து முன்னேறட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒஸ்கார் பரிசு 93

○ரேகா



திரையுலகின் வெவ்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக வருடாந்தம் ஹொலிவுட்டில் வழங்கப்படும் ஒஸ்கார் விருதுகளின் கடந்த வருடப் பரிகளிப்பு மார்ச் மாதம் நிகழ்ந்தது. 1993ன் சிறந்தபடமாகத் தெரிவான 'ஷிண்ட்லரின் பட்டியல்' (Schindlers liste) மேலும் ஆறு பரிசுகளையும் தட்டிச் சென்றது. அவை: சிறந்த இயக்குனர், - அலங்காரம், - படத்தொகுப்பு, - அரங்கமைப்பு, - சொந்தமாக எழுதப்பட்ட இசை (ஸ்பீல்பேர்க்கின் ஆஸ்தான இசையமைப்பாளர் ஜோன் வில்லியம்ஸ்), - (நாவலை அடிப்படையாகக் கொண்ட) கதை வசனம்)

பல தடவைகள் இயக்குனர் பரிசைத் தவறவிட்ட ஸ்பீல் பேர்க்கிற்குப் பரிகாரம் தேடும் வகையில் இவ்வருடம் அமைந்தது. அவரது மற்றொரு படமான 'ஜுராஸிக் பார்க்' சிறந்த காட்சி விளைவுகள் (visual effects), ஒலி, ஒலித்தொகுப்பு என்பவற்றிற்கான பரிசுகளைப் பெற்றது. ஆக ஸ்பீல்பேர்க் மொத்தமாகப் பத்துப் பரிசுகளைப் பெற்றார். ஸ்பீல்பேர்க் முன்பு தவற விடப்பட்டதைப் போல் இவ்வருடம் நியூஸிலாந்துப் பெண் இயக்குனரான ஜேன் கம்பியன் (Jane Campion - படம்: பியானோ) தவறவிடப் பட்டுள்ளார் என நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ் படவிமர்சகர்கள் கருதுகிறார்கள்.

ஊமையான ஸ்கொட்டிஷ் பெண் ஒருத்தி தபால் மூலம் மணமகளாக நிச்சயம் செய்யப்பட்டு தனது பியானோவுடன் நியூஸிலாந்துக் காட்டுப் பிரதேசத்துக்கு வருவதையும், அங்கு அவளது வாழ்வையும், 'பியானோ' சித்தரிக்கிறது. இப்படத்தில் பணியாற்றிய மூன்று பெண்கள் - சிறந்த நடிகையாக ஹொலி ஹன்ரர் (Holly Hunter), சிறந்த துணை நடிகையாக அன்னா பாகுயின் (Anna Paquin), சிறந்த மூலக்கதை வசனத்திற்காக ஜேன் கம்பியன் ஆகியோர் - விருது பெற்றனர்.

சிறந்த நடிகருக்கான பரிசு தொம் ஹங்க்ஸ்க்கு (Tom Hanks),



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பிலடெல்ஃபியா' படத்தில் எய்ட்ஸ் நோயாளியாக நடித்தமைக்காக வழங்கப் பட்டது. 'ஃப்யூஜிரிவ்' படத்தில் கடுமையான புலனாய்வாளனாக நடித்த ரொம்மி லீ ஜோன்ஸ் (Tommy Lee Jones) பெற்றார்.

சிறந்த (ஆங்கிலமல்லாத) பிறமொழிப் படமாக 'பெல்லி ஏபொக்' (Belly Epoque) எனும் ஸ்பானியப் படம் பெற்றது. டெபோரா கெர் என்ற நடிகைக்கு, கௌரவ ஒஸ்கார் விருது வழங்கப் பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் மிகநல்ல படமான 'ரைம் ஒஃப் இன்னஸென்ஸ்'க்கு (Time of innocence) சிறந்த ஆடையணிகளுக்கான பரிசு மட்டுமே வழங்கப் பட்டது. 'இன் த நேம் ஒஃப் த ஃபாதர்', (In the name of the father), 'றிமெய்ன்ஸ் ஒஃப் த டே' (Remains of the day) ஆகிய நல்ல படங்கள் ஒரு பரிசையும் பெறவில்லை.

---

*"ஒரு சிறந்த இயக்குனரின் படங்களில் பொழுதுபோக்கு மட்டுமன்றி சமூகப் பொறுப்பும் கூடவே இழையோட வேண்டும்"*
*- ஸ்ரீவன் ஸ்பீல்பேர்க் -*




## சிறந்த திரைப்படம்
## ஷிண்ட்லரின் பட்டியல்

இப்படம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது அறுபது லட்சம் யூதர்கள் கொல்லப்பட்ட பேரழிவை (holocaust) மையமாகக் கொண்டது. வழமையான 'பேரழிவு'ப் படங்கள் ஜேர்மனியரை அரக்கர்களாக (அதுவே உண்மையும் கூட) சித்தரித்ததைப் பார்த்த பழக்கதோஷத்தாலும், யூதரைக் காப்பாற்றிய ஒரு ஜேர்மனியனைப் பற்றியும் இதுவரை கேள்விப் படாததாலும், ஸ்பீல்பேர்க் ஒரு யூதர் என்பதாலும் இப்படமும் அப்படியே என எதிர்பார்த்தால் சிறிது ஏமாற்றமே ஏற்படும்.

இப்படம் 'பேரழிவி'லிருந்து 1200 யூதர்களைக் காப்பாற்றிய ஒஸ்கார் ஷிண்ட்லர் எனும் ஜேர்மனியன் பற்றியது. அவ்வாறாயின் ஷிண்ட்லர் அரக்கர் மத்தியில் வாழ்ந்த தேவனா என்ற கேள்விக்குப் பதில் சர்ச்சைக்குரியதே. யுத்தத்தில் கொள்ளை லாபம் தேடிய வியாபாரியாயும், நாஸியாயும், இரட்டை உளவாளியாயும் (ஜேர்மனிக்கும், யூதருக்கும்), ஊதாரியாயும், விருந்துகளில் நாட்டம் காண்பிப்பவனாயும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்தீரீலோலனாயும் வாழ்ந்த ஷிண்ட்லரைத் தேவன் என் சொல்வது எவ்வளவு பொருத்தமானது? எனினும் அவன் தன் தொழிற்சாலையில் வேலை செய்தோர், குடும்பத்தோரை நாஸிகளின் கொலைமுகாம்களில் இருந்து இறுதி நிமிடம்வரை காப்பாற்றத் தனது சொத்து முழுவதையும் பணயம் வைத்து யுத்த முடிவில் ஏழையாகிறான். அச் சொத்து யூதர்களின் உழைப்பாலேயே உருவானது என்றாலும் அதை அவர்களுக்காகச் செலவழிக்க வேண்டும் என்று ஒரு நிர்ப்பந்தமும் அவனுக்கு இருந்ததில்லை. இதனால் அவனால் காப்பாற்றப்பட்ட யூதரைப் பொறுத்தவரை அவன் தேவனாகிறான்.

யூதரைக் காப்பாற்ற வேண்டும் என்ற மனமாற்றம் ஷிண்ட்லருக்கு ஏன் ஏற்பட்டது என்பதை இப்படம் காட்டவில்லை. "எமக்கு நாம் காப்பாற்றப் பட்டதுதான் முக்கியமே தவிர, அதற்கான காரண காரியங்களை அலசி ஆராய்தல் அல்ல" என்பதே இதற்கான ஷிண்ட்ல யூதர்களின் பதிலாகும்.

மேலும் இப்படத்தின் புகழுக்குக் காரணம் அதற்குள்ள சமகால முக்கியத்துவமாகும். 'பேரழி'வின் ஞாபகங்கள் கால இடைவெளி காரணமாக மறக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் அதை நினைவூட்டி, மனச்சாட்சியைத் தட்டியெழுப்பும் பணியை இப்படம் செய்திருக்கிறது. அத்துடன் இன்று முதுமை அடைந்திருக்கும் ஷிண்ட்ல - யூதத் தலைமுறை (அவனால் காப்பாற்றப்பட்ட யூதர்) இறந்து போகுமுன் அவர்களது வரலாற்றை காட்சி ரீதியாக* ஆவணப் படுத்தியது என்ற வகையில் இதற்கு முக்கியத்துவம் உண்டு.



www.tamilarangam.net

எல்லாவற்றுக்கும் மேலாக இன்று ஐரோப்பாவில் புத்துயிர் பெற்று வரும் யூத எதிர்ப்பு, இனவாத இயக்கங்களுக்கு எதிரான ஒரு பிரசாரப் படமாகவும் (ஸ்பீல்போர்க்கின் விருப்பமும் அதுவே) இது உபயோகிக்கப் படுகிறது. (நோர்வேயில் ஷிண்ட்லர் இயக்கமும் செஞ்சிலுவைச் சங்கமும் இதில் ஈடுபட்டுள்ளன) வெள்ளைச் சிறார்களுக்கு ஆதர்சமாக ஹிட்லருக்குப் பதிலாக ஒரு ஷிண்ட்லரை இப்படம் தரக்கூடும்.

இப்படம் பாரிய பேரிழிவுக் காட்சிகளைப் படமாக்குவதில் வெற்றி பெற்றுள்ளது. அறுபதுலட்சம் யூதரும் பெரும் கூட்டமாக, திரளாக ஆக்கப் பட்டுள்ளனர். இதன் விளைவாக அதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரினதும் தனிமனித கதையின் சோகம், முக்கியத்துவம், தாக்கம் அடிபட்டுப் போய்விட்டதாக அதில்

* லெப்பொல்ட் (Leopold, Pfefferberg - முன்னைய பெயர்) பேஜ் (Page) எனும், பேரழிவில் இருந்து தப்பிய ஒரு யூதர் ஷிண்ட்லரின் கதையை உலகுக்குச் சொல்வதாக அவனுக்குக் கூறுகிறார். பின்பு லொஸ் ஏஞ்சல்ஸில் புத்தகக் கடை வைத்திருக்கும் அவர், தோமஸ் கெனல்லி (Thomas Kenally) எனும் அவுஸ்திரேலிய எழுத்தாளரை 1980ல் சந்தித்தபோது இக்கதையை அவருக்குக் கூறிப் புத்தகம் ஒன்று எழுதும்படி வேண்டுகிறார். அதற்குச் சம்மதித்த கெனல்லி 1982ல் 'ஷிண்ட்லர்ஸ் ஆர்க்' (Schindlers Ark) எனும் நூலை வெளியிட்டார். இதுவே அவ்வாண்டின் 'புக்கர்' (Booker) பரிசைப் பெற்றதுடன் நன்கு விற்பனையானது.



திரைப்படத்தின் கடைசிக் காட்சி

www.tamilarangam.net

பாதிக்கப்பட்ட சுவீடிஷ் பத்திரிகையாளர் ஒருவர் (Cordelia Edvardson) குறிப்பிடுகிறார்.

மேலும் இப்படம், பார்ப்போர் மனதில் பேரழிவுக்குக் காரணம் மன வக்கிரம் பிடித்த ஒரு சில இராணுவத் தலைவர்களே என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. இராணுவத் தலைமையில் இருந்து அடிமட்ட மனிதர்கள் வரை ஹிட்லரின் வக்கிரத்துக்குத் துணை போனதையும், அதை எதிர்க்க அல்லது அதற்கு முரணாக ஒரு சுண்டுவிரலைக்கூட அசைக்காததுமே உண்மையில் நிகழ்ந்தவை. கலை கலாசாரம் மிக்க ஜேர்மனியில் இத்தகு மோசமான மனிதவதை நிகழ எங்ஙனம் அனுமதித்தோம் என்ற மனச்சாட்சியைத் தட்டி எழுப்பும் கேள்வியை, தனிமனிதர் மனதில் எழுப்ப இப்படம் தவறிவிட்டது என்றும் அவர் கூறுகிறார்.



## மழலை கேளாதவர்

எம் இரத்தம் வரைந்த
சித்திரங்கள்
வெள்ளிப் பனிமலை நாட்டின்
கறுப்பு றோஜாக்கள்.
மழலைத் தோட்டத்தில்
முல்லைப்பூ முகங்களிடையே
முளைத்து நிற்கும்
சூரியகாந்திப் பூக்கள் - நீங்கள்

பாதங்களில் சறுக்கி பூட்டி
பனித்தொடர் பாதையில்
வழுக்கிச் செல்லும்போது
பைன் மரங்களும்
கைதட்டி இரசிக்கும்.

எம் பாலகரை எண்ணி
எங்கள் கண்களில்
நீர் பனிக்கும்.

கறுப்பும் வெளுப்புமாய்
கைகோர்த்து ஊர்வலத்தில்
கொடியசைத்துச் செல்லுகையில்
சமத்துவம் வானிடை மின்னும்
சந்தோஷம் எமக்குள் துள்ளும்.

உன்னை உச்சிமோர்ந்து
உள்ளங்கையில் முத்தம் கொடுக்க,
நீயுதிர்த்த மழலைமொழியால்
நாங்கள் அன்னியப்படும்போதுதான்,
மனசுக்குள் மசுக்குட்டி ஊரும்
செந்தேள்கள் காதினுள் ஓடும்.

● மகேன்

www.tamilarangam.net

பானுபாரதியின் இரு கவிதைகள்:

## வண்டுகளின் தலைமறைவு

பூக்களுக்கெல்லாம்
இறக்கைகள் வெளித்து
மரங்களைவிட்டு
பறக்கத் தொடங்கின காதலோடு.

ரீங்காரங்களின் நெடில்
பதுங்கு குழி அமைத்து
காற்றில் கலக்க மறுதலித்தது.

கொடுக்கு முளைத்த
கொடுமலர்கள் ஒழிகவென
துண்டுப் பிரசுரத்தை
எருவுருட்டும்
வண்டுகள் விநியோகித்தன.

சுதந்திரமாய்
சிறகு விரிப்போரே
வாருங்கள் காதல் செய்ய.
அழைப்பு விடுத்தன பூக்கள்.

நிகரோ
சரி நிகரோ
சமனோ
சரி சமனோ?

காற்றில் அசைவதே
பெரும் சுதந்திரம்
புயலைப் பிளக்க
புதிதாய்
சிறகு காட்டுவது
அபத்தம்; அடக்கத்தின் மரணம்.

ரீங்காரம்
ஒப்பாரியாய் ஒலித்தது
பதுங்கு குழியிலிருந்து
பலவீனமாய்.

## மானுடமாய் எழுகையில்.....

வாழ்வுப்புரிதல்
கை கோர்க்குமென்ற
நம்பிக்கைகள்
பயணம் செய்தன என்னோடு

வழியனுப்பிவைக்க வந்த
உறவுகளுக்கெல்லாம்
கையசைத்து
விடைபெறும் கணத்தில்
கனமாய் வந்து
விழுந்ததென் கைகளில்
கொண்டுசெல் சீருனக்கு
என்றொரு மூட்டை.

நம்பிக்கைகளோடு
நான்
பயணம் தொடர்கையில்
கூட வந்த
கனமான சீரின்
கனதி புரியாமற் போயிற்றப்போ.

நம்பிக்கைகளை
பரப்பிவைத்து
பயணக் களைப்பாற
தலை சாய்க்கையில்
கூடவந்த பொதியவிழ்ந்து
சோடி சோடியாய்
எழுந்து வந்த
அடுப்படி விலங்குகள்
தமக்குள்
கைகளைக் கோர்த்து
வட்டமாய் வேலி நர்த்தனமாடின
என்னை
சுற்றிச்சுற்றி.

நாசமானதோ என்
நம்பிக்கைகள்
என
அதிர்கையில்
தலைக்கு
அணையாயிருந்த
நம்பிக்கையொன்று
காதைக் கடித்தது
"தளராதே பெண்ணே!
மறவாதே நீ
மானுடம் என்பதை"
என்றது.

மானுடமாய்
நான் நிமிர்கையில்
மூட்டையாய்க் கூடவந்த
அடுப்படி விலங்குகள்
நர்த்தனமாட
கை கால்களற்று
அறுந்து வீழ்ந்தன நிலத்தில்

www.tamilarangam.net



## செத்ததாய்ச் சொல்லும் சுத்துமாத்து!

தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள், ஐதேகவிற்குக் கடந்த 16 வருடகாலத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய அதிர்ச்சி வைத்தியமாக வெளியாகியுள்ளன. முடிவுகள் பற்றிய பலரது பலவித கருத்துகட்கிடையே, கொழும்பில் இயங்கிவரும் தமிழ், முஸ்லிம் அரசியற் கட்சிகள், அவற்றின் தலைவர்கள் - தொண்டமான், சிவசிதம்பரம், அஸ்ரப், பிரேமச்சந்திரன், குமார் பொன்னம்பலம், கொழும்பு இயக்கங்கள் - இம்முடிவுகளை இனவாதத்திற்கு எதிராக மக்கள் அளித்த தீர்ப்பு என வர்ணித்துள்ளனர்.

நடந்துமுடிந்த தேர்தல் முடிவுகளை, தனிப்பட்ட முறையில் ஐதேகவுக்கும், விஜேதுங்காவுக்கும் கிடைத்த தோல்வியாகக் கருதலாம். ஆனால் ஐதேகவாகட்டும், பொதுஜன ஐக்கிய முன்னணியாகட்டும், இரண்டுமே பேரினவாதக் கருத்தமைவையே கொண்டன. சுதந்திரத்தின் பின் மாறி மாறி ஆட்சியில் அமர்ந்துவந்த இவ்விரு கட்சிகளுமே பரந்தளவில் பௌத்த சிங்கள பேரினவாதத்தையே வெகுஜன அடித்தளமாகக் கொண்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே பௌத்த பேரினவாதம் தனக்கென ஒரு தேசிய வடிவத்திலான மத, பொருளாதார, கலாசார அடித்தளங்களைக் கொண்டுள்ளது. இந்நிலையில் இவ்விரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகள் ஏற்ற இறக்கங்கள் அனைத்தும் சிங்கள பௌத்த பேரினவாதக் கருத்தமைவை மையப்படுத்தியே தோற்றம் பெறுகின்றன. இதனால் சிறுபான்மை இனங்களுக்கு எந்த நன்மையும் கிட்டப் போவதில்லை.

தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வென்றது, மக்கள் அவர்களை அங்கீகரித்ததாகக் கொள்ளப்படாமல், அரசின் ஜனநாயக விரோதப் போக்கிற்கும், காட்டுமிராண்டித் தனமான அரசியற் பொருளாதார ஒடுக்குமுறைக்கும் எதிராக மக்கள் அளித்துள்ள தீர்ப்பாகவே கருதப்படக் கூடியது. மாறாக, இனவாதத்திற்கு எதிராக மக்கள் திரள்வதாகவோ, இனவாதத்தை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்று கூறுவதோ நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளலே. உண்மையில், பேரினவாத அரசியலுக்கு மாற்றாக எதையும் மக்கள் தெரிவு செய்யவில்லை.

## இன்னும் தொடரும் பயங்கரவாதம்

சிங்கள ராணுவ பயங்கரவாதத்திற்கு நாம் சற்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை மீண்டும் ஒருமுறை கிழக்கு மாகாணத்தில்

www.tamilarangam.net

நிகழ்ந்துள்ள சிங்கள மீனவர் படுகொலை நிரூபித்துள்ளது. இதன் எதிரொலியாக நிகழ்ந்த வன்முறைகள், அப்பாவித் தமிழ் மக்கள் மீதான கொலைகளும் இனக் கலவரத்திற்கான ஆபத்து முற்றாக நீங்கிவிடவில்லை என்று அச்சுறுத்தியிருக்கிறது. இச்சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியன.

படுகொலைகள் நிகழ்ந்த உடன் அரசால் தமிழர்கள் கொல்லப்பட்டதும், அவர்கள் புலிகள் என அறிவிக்கப் பட்டதும் மிகக் கேவலமானதும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுமான நடவடிக்கையே. இவ்வாறு சம்பவத்தை நியாயப்படுத்தும் அரசு, சர்வதேச ரீதியில் தன்னைக் காப்பாற்ற முயல்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களது பாரம்பரியப் பிரதேசம் அங்கீகரிக்கப் படுவதும், அரசின் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் கண்டிக்கப்படுவதுமான குரல்களைக் கேட்க முடிவதில்லை. இதற்கான விளக்கத்தை வழங்காது விட்டதில் நாமும், இதற்கெதிரான குரலை வழங்காததில் சிங்கள முற்போக்கு சக்திகளும் பாரிய தவறிழைத்திருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

ஏனைய இன மக்கள் மீதான படுகொலைகள் எமது போராட்டத்தை ஒருபோதும் நியாயப்படுத்தா. மாறாக எமது போராட்டத்தின் நியாயங்களுக்குக் களங்கம் விளைவிப்பன. கடந்த காலங்களில் ஏனைய இன மக்கள் மீதான வன்செயல்கள் எமது போராட்டம் பின்தள்ளப்பட முக்கிய காரணமாக இருந்தமையை மறுக்க முடியாது. மறுபுறத்தில் நெருக்கடி நிலவும் பகுதிகளில், திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, அந்தச் சிங்கள மக்களைப் பலிகொடுத்துத் தமிழ் மக்களுக்கு எதிராக உலக அபிப்பிராயத்தைத் திசைதிருப்ப முயலும் அரசின் சதிக்கு இத்தகைய தாக்குதல்கள் உடந்தையாகின்றன. வேண்டுமென்றே சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி மக்களைப் பலியிடும் சிங்கள அரசின் போக்கும் கண்டிக்கப்பட வேண்டியது.

குடியேற்றங்களைத் தடுப்பதுதான் (சிங்கள மக்கள்மீதான) படுகொலைகளுக்குக் காரணம் எனக் கூறப்பட்டால், அது எமது அரசியல் வறுமையையே காட்டும். எமது போராட்டம் முழுமையாக மக்கள் மயப்படுத்தப் பட்டிருந்து, ஜனநாயக ரீதியில் வளர்ச்சி அடைந்திருப்பின் இத்தகு குடியேற்றங்களைத் தொடர்ச்சியாக மக்கள் போராட்டம் மூலம் தடுத்திருக்கலாம். தவிர குடியேற்றங்களைத் தடுப்பதற்குள்ள ஒரேவழி படுகொலைகள்தான் என்பது உண்மைக்கு மாறானது.

தமிழ்பேசும் மக்களின் நலன்களில் அக்கறை உள்ள யாவருமே இத்தகைய படுகொலைகளைக் கண்டிப்பதுடன் இதற்கெதிராகக் குரல் கொடுக்க வேண்டியது முக்கியமாகும். இல்லையேல் இலங்கையரசின், தேசிய சிறுபான்மையின மக்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் வெளிவர வாய்ப்பில்லை.

சுவடுகள் 55,
பங்குனி 94,
ஒஸ்லோ, நோர்வே

# Paralympics `94



## வெற்றியின் உச்சத்தில் மீண்டும் நோர்வே

● மஹிந்தன்

ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு பெற்றதும் அதே அரங்குகளில், உடல் ஊனமுற்றோருக்கான போட்டிகள் சற்று மாறுபட்ட விதிகளுடன் நிகழ்வது வழமை. 'பரலிம்பிக்ஸ்' (Paralmpics) என அழைக்கப்படும் இவ்வகைப் போட்டிகள் முதற் தடவையாக சுவீடனில் 18 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்தன. பெருமளவு பார்வையாளர்களை இந்தப் போட்டிகள் கவர்வதில்லை என்றாலும், பங்குபற்றுவோரது உற்சாகம் கரைகடந்தது. சாதனைகள் தனது மண்ணில் நிகழ்ந் பரலிம்பிக்ஸ் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றது. வழமையாகவே பரலிம்பிக்ஸில் முன்னணியில் திகழும் நோர்வே வீரர்கள் இம்முறை தமது மண்ணில் நிகழ்ந்த போட்டிகளில் முழுமையான வெற்றி ஒன்றை அதிக பதக்கங்களுடன் ஈட்டினர்.

இந்தப் போட்டிகளில், ஒலிம்பிக்கில் பங்கேற்றதில் பாதித் தொகையளவு (31) நாடுகள் பங்கெடுத்தன. மிக அதிக போட்டியாளர்கள் (81) ஜேர்மனியில் ரஷ்யாவில் இருந்து 45 வீரர்களே கலந்துகொண்டனர்.

133 போட்டிகளில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுக்காக 900 வீரர்கள் போட்டியிட்டனர். நோர்வே 29 தங்க, 22 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றது. ஜேர்மனி 25 தங்கம், 21 வெள்ளி, 18 வெண்கலத்துடன் இரண்டாம் இடத்திற்கு வந்தது. 24 தங்கம், 12 வெள்ளி, 7 வெண்கலத்துடன் அமெரிக்கா மூன்றாம் இடத்தையும் ஏனைய இடங்களை பிரான்ஸ், ரஷ்யா.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





நிலைநாட்டலோ, வெற்றியோ மாத்திரம் இப்போட்டிகளுக்கு முக்கிய குறிக்கோளாக இல்லாமல் பங்குபற்றலே இதன் முக்கிய உற்சாகமாகக் கருதப் படுகிறது. பாரம்பரியப்படி இவ்வருடம் குளிர்கால ஒலிம்பிக் நிகழ்ச்சிகள் நிகழ்ந்த நோர்வேயின் அழகிய சிறுநகர்களில் ஒன்றான லில்லஹம்மரிலும் இப்போட்டிகள் நிகழ்ந்தன.

உடல் ஊனமுற்றோக்கான நல்வாழ்வுத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் உலகில் குறிப்பிடத்தக்க நாடுகளில் ஒன்றான நோர்வே, இந்தத் தடவை இருந்து வந்திருந்தனர். அதிக போட்டியாளர்களை அனுப்பிய பிற முக்கிய நாடுகள்: நோர்வே (80), ஒஸ்ற்றியா (73), இத்தாலி (64), ஜப்பான், அமெரிக்கா (62), கனடா (60) பிரிட்டன், சுவீடன் (57) என்பன.




ஒஸ்ற்றியா, பின்லாந்து, சுவீடன் என்பனவும் பெற்றன. ஏழு நாடுகள் பதக்கம் எதையும் பெறவில்லை.

---



"எங்கள் கட்சிக்குள் சண்டை என்று புதிதாகக் கண்டுபிடித்தது போல் பத்திரிகைகள் பிரசாரம் செய்கின்றன. உண்மையில் முன்பிலிருந்தே நாங்கள் ஆளையாள் குழிபறித்துக் கொண்டுதான் இருந்தோம். இதில் எங்கள் கட்சிக்கு 25 வருட வரலாறு உண்டு...!"

– சீனு –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காய்ச்சலும் சிவக்கப் பாஸ்போர்ட்டும்




கூத்தரின் கிழவிக்கு மலமள்ளும்
கனவினின்று கண்விழிக்க,
காய்ச்சலில் எனது தேகம்
கனல்வதைத் தெரிந்துகொண்டேன்.

ஒஸ்லோ நகர் மானிடரை
ஒரு சில நாட்களாக
வாட்டி வதைத்து வரும்
வன்முறைக் காய்ச்சல் இது.

"வேகமாய்ப் பரவுது காய்ச்சல்
விற்றமின் சீ விழுங்கு" என்று
நேற்றுந்தான் தூரிட் சொன்னாள்
கேட்டேனா!
வெள்ளையர்கள் வியாதி இது
வீண்பயமேன் நமக்கென்று
வீம்பாக இருந்துவிட்டேன்.

முட்டுக்கள் தோறும் முகாமமைத்து
மூர்க்கமாய்த் தாக்கியது நோய்க்கிருமி.
தீக்குழம்பில் போட்டதுபோல்
தேகமெங்கும் ஒரே தகிப்பு.
தூக்கினால் உடையும்போல்
தோன்றிய தலையினுள்ளே
தொடர்ச்சியாய் இடிமுழக்கம்!

"தொழிலுக்குப் போகேல்லையே?"
கடிகாரம்
துயில் கலைந்து சிணுங்கியது.

"இன்று எனக்கு முடியாது"
என்றேன் இங்விலிடம்.

"ஓ.. நீயுமா?" என்றவளின்
"ஓ"வில் நீளெரிச்சல்.
தொடர்ந்தது சிறு மௌனம்.
தொலைபேசி வாயடைத்து
என்னையவள்
தூற்றி முடியும்வரை பொறுத்திருந்தேன்.

"வருத்தம் என்று சொல்லி
வந்த தொலைபேசிச் செய்தி ஆறு!
இன்றைய தினப் பொழுதை
எப்படி நான் முடிப்பேனோ!"

சொன்னவளின் சிரமத்தை
அவள்
சொல்லாமலும் நானறிவேன்.

"உண்மைதான் இங்வில்!
உன் நிலமை புரிகிறது
என்னை நீ நன்கறிவாய்
இரவிரவாய்க் குடித்துவிட்டு
"வருத்தம் வரமாட்டேன்" என மறுநாளுனை
வருத்தும் ரகம் நானில்லை" யென
அழுத்தம் கொடுத்துச் சொன்னேன்.
அவளும் உணர்ந்து கொண்டாள்.

சிப்பி

www.tamilarangam.net

"பொறுத்துக்கொள் என் தவறை
புண்படப் பேசிவிட்டேன் நான்!
குழம்பிப் போயிருக்கின்றேன்.
கொஞ்சம்
கோபமாய் நடந்து கொண்டேன்!
நன்கு நீ ஓய்வெடு; நிறையவே நீர் குடி
நலம் பெற வாழ்த்துக்கள்!" –
வைத்தாள்.

பசித்தது; ஆனாலும்
பாண் நினைப்பே வெறுத்தது.
கோப்பி, தேத்தண்ணி ஏதும் சூடாய்க்
குடித்திடத் தவித்தது நாக்கு.

கட்டிலை விட்டெழும்பக் கொஞ்சம்
கடுமையாய் முயற்சி பண்ண
சட்டென வயிறு பிரண்டு
சத்தியாய் மிரட்டத்
தலை வெட்டிய துண்டாய்ச் சுற்றி
துவண்டுபோய் கட்டிலில் சாயும்.

சந்திரன் வீட்டில் நிற்பான்
சாந்தனும் நிக்கக்கூடும்
அன்ரனி நான் வருத்தமெண்டால்
அடுத்த நிமிடமே இங்க நிற்பான்
என்றெல்லாம் நான் நினைத்து
ஏழெட்டு 'கோல்' எடுத்தேன்.
ஆனால்
சந்திரன் வீட்டிலில்லை
சாந்தனின் காலில் நோவாம்
இப்ப நொண்டியே நடக்கிறானாம்
இல்லையேல் வந்திருவானாம்
அன்ரனி ரெண்டு 'வக்தாம்'
அங்கயே படுத்துவிட்டானாம்– என்று
நண்பர்கள் சாட்டுச் சொல்லி
நைசாக நழுவிக் கொள்ள
நெஞ்சிலே சோகம் சூழ
கண்ணில்
நீர்த் திரை படரக் கண்டேன்.

என் துணை எவருமில்லை
எனக் கண்டதும் கொடிய காய்ச்சல்
வஞ்சினம் கொண்டு என்னை
வாட்டிடச் சோர்ந்து போனேன்.

நண்பர்கள் காலைவார
நத்தார் நாட்கள்தான்
காரணம் போலும்.
ஒன்றொடு மூன்றில் ஒன்று
ஊதியம் உயரும் நாட்கள்! மேலும்
ஓவர்ரைம் என்று வந்தால்
உறவுகள் மறந்து போகும்
தொற்றிடும் காய்ச்சலன்றோ!
சற்றுத் தூரத்தான் நிற்கத் தோன்றும்.

சென்றதோர் நாளில் – எனக்கு
சிவத்தப் பாஸ்போர்ட் வந்ததும்;
வந்ததை அறிந்ததும் நண்பர்கள்
வரிசையாய் 'கோல்' எடுத்து
என்னைப்போல் சுறுக்காய் அதிர்ஷ்டம்
எவருக்கும் அடித்ததேயில்லையென்று
பேருக்கு வாழத்திப் பின்னால்
பெருமூச்சு விட்டதும்
மறுநாள் நான்
இரண்டு கேஸ் 'பியர்'ரெடுத்து
இறைச்சியும் சோறும் காய்ச்சி
அவர்களை அழைத்துக் கொட்டம்
அடித்ததும்; அடுத்த வீட்டார்
எரிச்சல் கொண்டு முறைத்ததும்
ஏனோ, இப்போ நினைத்திட வலித்தது.

என் பெரும் அதிர்ஷ்டம் என்று
எண்ணிய சிவத்தப் பாஸ்போர்ட
நான்
துன்புறும் நேரம் இப்போ,
எனக்குத்
துணையாக வந்திடுமா?

● ● ● ●

www.tamilarangam.net

கோவில் மணியும்
ஆலமரக் காகங்களும் இருள் விரட்ட,
இன்னும் நான் துயில் விலகா
ஈழத்தின் ஒரு விடிகாலை.

சாந்தகப்பை, அடிமட்டம்
சாக்குப்பையில் இருக்கிறதாவென்று
சரிபார்த்து, படியிறங்க முன்பாக
விபூதிக் குடுவையில் விரல்விட்டு
"விநாயகனே" என முணுமுணுத்து
நெற்றியிலே கோடிழுக்கும் அய்யாவை
எரியாத மேசைவிளக்கு சினமூட்ட
போர்முரசு அதிர்கிறது.

"எழும்புற யோசனை துரைக்கு இல்லைப்போல..
இந்த முறையாவது சோதனை தாண்டுவாரா?
இல்ல; என்ர கட்ட வேகிறவரை....."

"இரவிரவா படிச்ச பிள்ள...
எழும்புவான்; நீங்க வாங்க
தேத்தண்ணி ஆறுது"

வாளெடுக்கும் அய்யாவை
வசப்படுத்த முயல்கிறாள் அம்மா.

எதிரியின் கோட்டையிலே
போர் முழக்கம் கேட்டு
"சார"த்துள் முகம் புதைத்து
சந்தோசப்படும் தம்பி.

சாம்பல் கையலம்பி
சட்டி, பானை காலிடற
அக்கா வந்தசைத்து
"அப்பன் எழும்பன்ரா..
அய்யா கொல்லப்போறார்"
என்று பரபரத்தும்
இன்னும் விழி மூடி முனகும் நான்.

"ஏன்ரா சுகமில்லையா?" -என
நெற்றியிலே கைவைத்துக் கேட்டவளின்
குரல் உயர்ந்து போகிறது.

"அம்மா!
பெரியவனுக்குச் சரியான காய்ச்சல்"
அக்கா அறிவிக்கிறாள்.

"எனக்குத் தெரியும்
எனக்குத் தெரியும்
இவள் ராசம்மா,
-உனக்கென்ன! மகன்
வளர்ந்திற்றான்-
எண்டு உமிஞ்சபோதே
எனக்குத் தெரியும்"
அம்மா ஆரம்பிக்கிறாள்.

அம்மாவின் கணக்குப்படி
எங்கள் வீட்டில் மட்டும்
எவருக்கு நோய் வரினும்
ராசம்மா மாமியின்
கண்கள் இரண்டும் காரணமாம்!

அடுத்த காட்சியிலே
குணம் மாறும்
தமிழகச் சினிமா வில்லன்போல்
அய்யாவும் மாறுகிறார்.
தொட்டு, பரிவோடு
"நல்லாக் கொளுத்துது"
சொல்கையிலே மனம் நனையும்.

"கணேசுப் பரியாரியிட்ட
கூட்டியண்டு போகட்டே?"
பகை மறந்த தம்பி
பாசத்தோடு கேட்கின்றான்.

"கொத்தமல்லி அவிக்கிறன்
ஆச்சி வீட்ட
வேர்க்கம்பு இருக்கா கேள் முதல்ல"
அக்கா அவனை விரட்டுகிறாள்.

"அப்படியே
ஆச்சியையும் வரச்சொல்லு!"
ஆச்சியின் வைத்தியத்தில்தான்
அம்மாவின் நம்பிக்கை.

www.tamilarangam.net

படலையில மணியடிக்கும்
முருகேசண்ணர்
அய்யாவின் தாமதத்தை
அறிந்து, பின்னர்
"அண்ண நான் அவங்களோட
முதல்ல போறன்
ஆறுதலாய் நீங்க வாங்க"
என்று போனார்.

"தண்ணிவிடாய்
போலிருந்தால் சொல்லு தம்பி!
வேணுமெண்டா உப்புச் சோடா
வாங்கித் தாறன்!"
கீரி கண்ட கோபத்தோடு
சீறுகின்ற ஐயாப் பாம்பு
கன்று நக்கும் பசுவைப்போல
கசியும் நேச மாயம் என்ன?

வேலித் துவாரத்தால்
வீதியில் செல்லும் சிலருக்கும்,
"என்ர பெடியனுக்கல்லோ
எரியுது காய்ச்சல்" என்று
ஒலிபெருக்கிறாள் அம்மா.

ஆச்சி வருகின்றாள்.
உப்புக் கல்லும்
செத்தல் மிளகாயும்
பொத்திய கையினால்
என்னுடல் தொட்டு
"துப்படா!" என மிரட்டியென்
துப்பலைக் கையேந்தி
எரியும் அடுப்பினுள்
ஆச்சி எறிகையிலே
வெடித்துச் சிதறும் உப்புக்கல்லு.

"சரியான கண்ணூறு"
ஆச்சி சொல்ல,
அம்மா குதிக்கிறாள்.
"நான் சொன்னனன்
நான் சொன்னனன்"

"கொத்தமல்லித் தண்ணி
கொஞ்சம் குடிச்சிற்றுப் படன் அப்பன்"
அக்காவின் குரற்கனிவில்
அரைவாசி நோய்தீரும்.

"பின்னால ஏறண்ண;
பிடிச்சுக்கொள்; கவனம்"
உன்னி உன்னி சைக்கிளோடும்
தம்பி, மனம் நெகிழ்விப்பான்.

எங்கள் ஊரில் என்னைவிட்டால்
எவனுக்குமே காய்ச்சல்
இதுவரை வந்ததில்லை
என்பதுபோல்
அரைக்கம்பக் கொடியேற்றும்
அம்மாவின் ஆர்ப்பாட்டம்.

"என்ன வேணும் தம்பி
என்ன வேணும் தம்பி"
என்றபடி என்னையே
வலம்வருகின்ற அய்யா.

எனக்கு வந்த காய்ச்சலுக்காய்
வீடே சோகமுறும்.
எனக்காகத் துடிக்கின்ற
மனங்கள் கண்டு
எனக்குள் மமதை தொற்றும்.
இன்னும் சில நாட்கள்
இதையெல்லாம் அனுபவிக்க
இரகசியமாய் மனமேங்கும்.

● ● ● ●

காய்ச்சல் களைக்காமல்
காய்ந்தது.
எழும்பிட நினைத்தேன்.
எனினும் முடியவில்லை.

நாளையோ
நாளை மறுதினமோ

www.tamilarangam.net

நணபர்கள் வரக்கூடும்.
வந்து " சொறி மச்சான்"
சொல்லக்கூடும்.
மீண்டும்
பார்ட்டிகள், பகிடிகள் என்று
நானும் கரைந்திடக்கூடும்.

எனினும் இப்போது,
இருட்டிய பின்னும்
வெளிச்சமில்லா இவ்வறையில்
வருத்திடும் காய்ச்சலும்
நானும்
என் சிவத்தப் பாஸ்போர்ட்டும்.

---

## சிதைந்த நெடுஞ்சாலைகள்

சீரான வாழ்வு - அது
நீண்ட பயணம்.


பயணத்திற்குப் பக்குவப்பட்டு
சாரதி அனுமதியும் பெற்று,
காலத்து எண்ணங்களை
சுமந்து வந்த வண்டி இது,
நெடுஞ்சாலை ஏறியதும்
தடுமாற்றம் - குடைசரிந்தது.

வாழ்வுச் சுமையுமல்ல
வயதான சாரதியுமல்ல
சிதைந்த நெடுஞ்சாலைகளால்!
ஆம், நாடெங்கும்
சிதைந்த நெடுஞ்சாலைகள்.

சாலையோரக் கற்குவியலில்
களவாடுபவர்களும்
ஆக்கிய சாலைகளைத்
தகர்ப்பவருந்தான் அதிகம்.

நிர்மாணிகளுக்கு தூக்கமாத்திரைகள்
துப்பாக்கிகள் வழங்குகின்றன.

அருவி



## காட்டிக்கொடுப்பு

பூமிப் பந்தைப் பொசுக்கி
பொடி பூசி
சாமி வந்திருந்தார்
நேற்றெனக்கு
தரிசனத்தில்


தலைமேல் கைவைத்து
ஆவியே போ! - என்றார்.
தூயவனே
எழுந்து நடக்கத் துணைவருவான்
பாதம் கொள்! - என்றார்.
"தூரவண்டே நிற்க ஒருவன் தேவை"
ஊழியம் செய்
ஊனுருகவே! - என்றார்.

கொலரைப் பொத்தி
கோணலாக்கி நின்றேன்.
அவரே கேட்டார்
என்ன வேண்டுமென்று.
நேருக்கு நேர்
கண்ணெதிரே வாழும் யேசு
வேண்டுமென்றேன்.
சிரித்தபடி சிலுவையைத் தந்தார்.
சீச்சீ' என்றேன்.

அவரே ஒற்றிக்கொண்டார்
தம் உதடுகளில்
யூதாஸ் கரியோத்!
இவன் எப்படி இங்கே
உயிர்த்தெழுந்து.

வயவைக்குமரன்
180493

www.tamilarangam.net



**● பிரசன்னா**

முக்கித்தக்கி உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி முடித்த சந்தோஷம் இலங்கை அரசின் முகத்தில் களைகட்டி இருந்தாலும் பாராளுமன்றத்தினூடாக ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க முடியவில்லையே என்ற கவலையும் அப்பித்தான் கிடக்கிறது. "விஜேதுங்க தேர்தலுக்கு நிற்கப் பயப்படுகிறார்" என்ற எதிர்க்கட்சியினரின் நக்கலும், இப்போதுள்ள தேர்தல் சட்ட விதிகளும், "பொருளாதாரத் தடை நீக்கமும் யுத்த நிறுத்தமுமே பேச்சுக்கு யோசிக்க வைக்கும்" என்ற புலிகள் தரப்பு அறிவிப்பும், இந்தியாவின் தயக்கமும், உள்ளூரின் இராணுவ நிலைமைகளும் இம்முறை அரசைப் போட்டுச் சிப்பிலியாட வைத்துள்ளது.

அரசுக்கு யாழ்ப்பாணத்தை அடித்துப் பிடித்து விடுவதற்கோ நேரம் இப்போ சரியில்லை. பூநகரித் தாக்குதலின் பின் பூவா தலையா போட்டுப் பார்க்கும் நிலையில்தான் இராணுவ நம்பிக்கைகள் இருந்து வருவதால் அரசுக்குக் கைகளை மேசையில் குத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இந்தியாவை இழுத்தென்றாலும் நிலைமைகளைச் சரிக்கட்டி விடலாம் என்றால், அது வந்து கிழக்கையும் குழப்பிப் போடும் என்ற பயம் தலையைச் சொறிய வைக்கிறது அரசுக்கு.





ஆனாலும் இந்தியா வரலாம் என்ற எதிர்பார்ப்போ பலரையும் நுனிக் கதிரைக்குக் கொண்டுவந்துவிட்டது.

சர்வதேச மற்றும் இந்திய நிலைமைகள் இந்தியா இப்போதைக்கு இலங்கையில் இறங்காது என்பதை உறுதியாக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருகின்றன. "நான் சிலோனுக்குப் போறேன்" என்று சொல்ல கைகாட்டி அனுப்பி வைக்கிற அரசியல் நிலைமைகள் தமிழ்நாட்டில் இல்லாததால் மூலைக்கு மூலை காய்களை வைத்துக்கொண்டு கிளி பாய முடியாது இந்தியாவுக்கு. சமீபத்திய ரஷ்ய அமெரிக்க உறவுகளும், அண்ணன் தம்பி வரைக்கும் வந்துவிட்ட இஸ்ரேல் இந்திய உறவுகளும் இப்போதைக்கு இந்தியாவை இலங்கை விவகாரத்தில் கஷ்டப்பட்டுப் பழமேறவும் வைத்துவிடவில்லை.

சூரியகந்த, உடவளவ புதைகுழிகளின் விவகாரங்கள் பூனை குறுக்கை போன பிரச்சனை மாதிரி இருந்தாலும், வடக்குப் பிரச்சனையே கெட்ட சகுனமாக இருக்கிறது அரசுக்கு. வடக்குக் கிழக்குப் பிரச்சனையைக் காட்டித் தேர்தல் விதிகளை மாற்றுதற்கான கருணையை நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டாலும் பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனங்களின் வாக்குகளைத் தவர்த்திப் பார்த்தாலும் கூட, ஏனையவை இங்காலோ அங்காலோ என்ற நிலையில்தான் இருக்கிறது.

அரசுக்கு இப்போ இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்றில் புலிகளுடன் வலியப் பேச்சுக்குப் போகவேண்டும் அல்லது பாராளுமன்றத்தில் ஆளிழுப்பு வேலையைத் தொடங்க வேண்டும். இவை இரண்டையும் விட்டுவிட்டு வடக்கில் யுத்தத்தை முனைப்பாக்கினால், தெற்கில் தலைவர்கள் பந்தாடப்பட்டுத் தேர்தலுக்கு முழுக்குப் போடவேண்டி வந்தாலும் வரலாம் என்ற யுத்தத்தின் அர்த்த சாஸ்திரங்களை அரசும் அறியாமலில்லை.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் எவ்வளவோ குடுக்கல் வாங்கல்கள் இருந்தாலும் இன்னைய நிலைமைகள் மடியில் கைவைத்துப் பேசும் அளவுக்கு அவ்வளவு 'சீப்' ஆகிவிடவில்லை. இம்முனை அரசின் பக்கம் அவசரம் இருப்பதால் புலிகள் எதையாவது 'டிமாண்ட்'டாகக் கேட்கலாம் என்ற பாதிப் பயம் அவர்களை வாட்டாமலும் இல்லை. ஒன்றோடு ஒன்றாய் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களுக்கு நல்லதொரு தீர்வை முன்வைக்க முடியாத புலியின் அரசியல் எதைக் கேட்கப்போகிறது என்பது ஒருபுறமிருக்க, புலிகள் கேட்பதைப் பகிரங்கமாகக் கொடுத்துவிட்டுத் தெற்கில் துணிந்து நிற்க முடியாத அரசுக்கு வெள்ளி துலாவிலை நின்றாலும்கூடப் பல சதிகளில் புரண்டெழும்பத்தான் வேண்டி வரும். இது ஒன்றும் அரசுக்குப் புதுவிளையாட்டு அல்லவென்றாலும் புலிகளை விடவும் அரசுக்கோ தன்ரை உயிர் பெரிசு.


பாராசுமன்றத்திற்குள் ஆரிழுப்பு வேலையைச் செய்து முடிப்பதென்றால் கூட அவ்வளவு இலேசான வேலையல்ல. 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைத் திரட்டக்கூடிய ஆள்பிடிகாரனை அரசால் குறுகிய காலத்துக்குள் உருவாக்க முடியுமா என்பது கேள்வியே. தேர்தல் சட்ட விதிகளையும் மாற்றிக் கொண்டு பெரும்பான்மை இனவாதப் போக்கில் முன்னேற நினைக்கின்ற போதும் பாராளுமன்றத்தில் தனக்குச் சாதகமான பாராளுமன்றத்தில் தனது கட்சிக்குச் சாதகமான பெரும்பான்மை இல்லையேல் சாண் ஏறி முழம் சறுக்கும் நிலையே இருக்கும் என்ற வயிற்றெரிச்சல் அரசுக்குக் கிளம்பாமல் இல்லை.

அரசின் ஆக்கினைகள் தாங்க முடியாமல் இராணுவம் போய் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க முற்பட்டு அது தோல்வியில் முடிந்தால் இத்தோல்விகள் ஏற்படுத்துகிற நம்பிக்கையீனம் சிங்கள வாக்குகளில் தொற்றி, பூந்து விளையாடவே செய்யும்.

ஏற்கனவே சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரி விஜேதுங்க உள்நாட்டில்

(தொடர்ச்சி 59ம் பக்கம்) 

www.tamilarangam.net




"இலட்சியம்....
இரகசியம்......
குப்பி........
சயனைட்......
தற்கொலை......
தியாகி........

22 செக்கன்களில் உயிர் அழிந்துபோகிறது. யாராவது உன்னை நெருங்கி வந்து... உன் இரகசியம் என்ன? என்று கேட்டால் - முதலில் தெரியாது என்பாய். நெருக்கிய பின்னர்... தெரியும், ஆனால் சொல்லமாட்டேன் என்பாய். மீண்டும் மீண்டும் நெருக்கிய பின்னர் நீ தற்கொலை செய்துகொள்கிறாய். உனது முடிவு உனக்கே உரியது. யாரும் தலையிட முடியாது. ஆனால் - "உயிரழிந்த பின்னும் வாழும் உன் பெயர்" எனும் உந்தல் பற்றிச் சந்தேகமே! எத்தனை உயிர்கள் அழிந்துவிட்டன இதுவரைக்கும். அத்தனை உயிர்களும் இறந்தபின்னும் வாழ்கின்றனவா? 'வாழவேண்டும்' என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் வாழ்கின்றனவா? என்பதுதான் கேள்வி. மில்லியன் வருடங்களாக மனித உயிர்கள் வாழ்கின்றன. வாழ்ந்த எவ்வளவு உயிர்களை ஞாபகம் வைத்திருக்கிறது இந்த உலகம்? பாட்டன் பெயரைப் பேரனுக்கு வைக்கிறார்கள் பெற்றோர்கள். பாட்டனின் பாட்டன், பேரனின் பேரன் அவ்வளவும் ஞாபகத்துடன் இருக்கிறதா இப்பொழுது? காலம் போகப்போக நாம் மறந்துவிடுகிறோம். எல்லாவற்றையும்தான். காதலையும்..... தியாகத்தையும்.... பாசத்தையும்.... வீரத்தையும்..... எல்லாவற்றையுமே மறக்கிறோம் என்பதுதான் உண்மை! அதை ஞாபகப்படுத்த முடியாது என்பது அதைவிடப் பெரிய உண்மை! உண்மைகள் பொய்களாவதும், பொய்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புழுகுகளாவதும் புழுகுகள் உண்மைகள் என நியாயப்படுத்தப் படுவதும்.... எல்லாமே சாத்தியமாகிறது. சிலவேளை ஒன்றுமே சாத்தியமில்லாமலும் போகிறது. இப்படியான இரண்டுங் கெட்டான் நிலையில் அறிவுலகம் தளம்பிக் கொண்டிருக்கையில் –

"எனது சாவு உத்தமமான ஒரு தியாகம்"

"எனது சாவு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்"

"எனது சாவு பலரைப் பழிவாங்கும்"

"எனது சாவு காலத்தால் அழியாதது"

"எனது சாவு தவிர்க்கமுடியாத ஒரு தேவை"

"எனது சாவு தலைவனுக்கானது"

என்பது போன்ற வாதங்கள் அல்லது சிந்தனைகள் உண்மையில் அறிவு சார்ந்ததுதானா?

எதனை நோக்கி இந்தச் சாவுகள் நிகழ்கின்றனவோ அதனை நியாயப் படுத்துவதில்கூட இந்தச் சாவுகள் முரண்படுகின்றனவே! ஆண்டவனே மூளையை அதன்பாட்டில் இயங்கவிடு! மூளை தான் நினைப்பதைச் செய்யட்டும். மூளை ஒருபோதும் ஊத்தையாவதில்லை. 'மூளை ஊத்தையாகிறது' என்பதுகூட ஒருவகையில் மூளைச் சலவைதான். மூளையைச் சலவை செய்யத் தேவையில்லை. யாருக்குந் தெரியாது எப்பொழுது என்ன நடக்குமென்று. தயவுசெய்து உங்களுக்கு எதிர்கூற முடியுமெனின் கூறுங்கள். ஆனால் அதை ஏன் மற்றவர்மேல் பரீட்சித்துப் பார்க்கிறீர்கள். சாவு பற்றிய வியாக்கியானங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட வேண்டிய இடம் நீங்களும் உங்கள் முடிவுகளுமே ஒழிய மற்றவன் மீதல்ல.

எந்த ஒரு மனிதன் சாவு பற்றிய அறிவை முன்வைக்கிறானோ, அவன் முதலில் தன்னுள் முரண்படுகிறான்.

என்னிடம் இவ்வளவு தற்கொலைப் படை உண்டு அல்லது அந்தத் தலைவனிடம் இவ்வளவு தற்கொலைப் படை உண்டு என்ற கூற்றுகளில் பெருமைப்பட எந்த விஷயமும் இல்லை. இங்கே களங்கப்படுவது அறிவுதான். மனித வாழ்வுதான். ஒரு தலைவன் எங்கோ நோய்வாய்ப்பட்டு இருக்கும் பொழுது அவன் குணமடைய வேண்டுமென ஐந்து பிள்ளைகளின் தகப்பன் எங்கோ ஒரு கிராமத்தில் தீக்குளித்து இறந்துபோவது தலைவனுக்குப் பெருமை தேடித்தரும் விஷயமல்ல. "இது பெருமை எனத் தலைவன் விரும்பியதால்தான் இது நடக்கிறது" என்ற குற்றச்சாட்டிலிருந்து தலைவன் தப்புவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும்.

ரகுநாதனால் இதற்குமேல் சிந்திக்க முடியவில்லை, ஏன் அழவுங்கூட முடியவில்லை. நான் ஏன் இப்படி எல்லாம் சிந்திக்கிறேன் என்றுகூடக் கேட்டுப் பார்த்தான். பதிலில்லை. சிந்தனைகளுக்குத் தடை இல்லை. சிந்தனை எப்படியும் எங்கேயாவது தாவிப்பாயும், தடம்புரளும். குறிக்கோள் வைத்துக்கொண்டு சிந்திக்க முடியுமா என்று தோன்றவில்லை. குறிக்கோள் இல்லாமலும் சிந்திக்க முடியுமா என்று தோன்றவில்லை.

அவனுக்கு எல்லோர் மேலும் ஏனோ எரிச்சல் வந்தது. இந்த உலகத்துக் குறிக்கோள்கள்.... இலட்சியங்கள்... நோக்கங்கள்.... எல்லாவற்றிலுமே விமர்சனம் வந்தது. விமர்சனங்களைப் புரிந்துகொள்ள மக்கள் இருக்கிறார்களோ என்றுகூடச் சந்தேகம் வந்தது.

* * *

தங்கையின் இதழ்களுக்கிடையில் வழிந்த வெண்நுரையைத் துடைத்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருவிழிகள் மேலே செருகியிருந்ததைப் பார்த்துக் கைகளால் - விரல்களால் இமைகளை மூடி அதை மறைத்தான். வலது கண் புருவத்துக்கு மேலே வழிந்து உறைந்துவிட்டிருந்த குருதியைத் துடைத்தான்.
போகவில்லை.
அப்படியே - சிக்கடைந்த கருங்கூந்தலுடன் முகத்தை - தலையை தன்மடியில் கிடத்தினான்.
மீண்டும் ஒருதடவை உற்றுப் பார்த்தான்.
நீலம் பாரித்த முகம் மடியிற் கிடந்தது.
உயிர் பிரிந்த உடல் மடியில்..... தானே கிடந்தது.
வெளிறிப்போன முகத்தில் ஏக்கங்கள் இல்லை. இரக்கம் இல்லை. விரகதாபம் இல்லை. வெளிறியபடி வெள்ளை வெளேரென்று, நானொரு வெண்திரை என்பதுபோல் இருந்தது.
நாடிக்குக் கீழ் உள்ள மச்சம் மட்டும் வெண்திரையில் ஒரு கரும்புள்ளி போல அழகாக இருந்தது.
இந்த நேரத்திலும் அவள் அழகாகத்தான் இருக்கிறாள்.
அழகு சாவதில்லை!
மல்லாத்தி என் மடியிற் கிடத்திய பொழுதுகூட... தேவதைபோல் தான் இருக்கிறாள்.
அன்று -
தன் இளமையை வேறொருவனுக்கு இழந்த கணத்தில்கூட நீட்டிய தண்ணிச் செம்புடன் அழகு சொட்டச் சொட்டத்தான் நின்றுகொண்டிருந்தாள்.
விஷயங்களைப் புதிய தலைமுறையின் விளக்கங்களுடன் நீ விளக்குகிற விதம் -
உன் வேகம்
உன் நளினம்,
உன் சாதுரியம்,
உன் முடுக்கு,
உன் முன்னேற்றம்,
இவ்வளவு படித்த அனுபவசாலியான அண்ணனையே பேக்காட்டும் அளவுக்கு வளர்ந்த உன் புத்திக் கூர்மை!
அம்மா... ஏனம்மா இப்படிச் செய்தாய்?
அண்ணனுக்கு ஒரு வார்த்தை சொல்லிப் போட்டுச் செய்திருக்கலாந் தானே!
நான் உன்ரை எந்த விஷயத்திற்குத் தடையாய் இருந்தனான்?
நான் உன்ரை எதுக்கு எதிராய் இருந்தனான்?
ஏனடி இப்பிடிச் செய்தனீ?

---

**"எனது சாவு**
**பலரைப் பழிவாங்கும்"**
**"எனது சாவு**
**காலத்தால்**
**அழியாதது"**

---

ஏன் எண்டு கேக்கேல்லை. கேக்கவும் எனக்கு உரிமையுமில்லை. ஆனா நீ! உனக்கு நீயே கேட்டுப் பாத்திருக்கலாந் தானே!
Please....! why didn't you ask you before, tell me.
என்னைப் பாரடி. என்ரை முகத்தைப் பாத்துச் சொல்லு, நான் உனக்கு என்ன குறை வைச்சனான்?
மடியிற் கிடந்த சந்திராவின் உடல் அசையவே இல்லை. சயனைட் விழுங்கியதால் உடல் முழுக்க ஒரே நீலமாய்க் கிடந்தது. கொயிலடியிலிருந்து சனக்கூட்டம் வீடுவரை நிறைந்திருந்தது. தோரணங்கள்... வாழைகள்... எல்லாம் வேண்டிய இடங்களிலும், வேண்டப்படாத இடங்களிலும் கட்டப்பட்டும், தொங்கிக்கொண்டும் இருந்தன.
இயக்கப் பெடியள் பெட்டையள் பலர் வீட்டையும் பிரேதத்தையும் சுற்றி வளைத்து நின்றுகொண்டிருந்தனர்.
மெதுவாக மடியிற் கிடந்த சந்திராவின்

www.tamilarangam.net

முகத்தை நகர்த்திவிட்டு ரகுநாதன் எழுந்தான். மீண்டும் ஒரு முறை தன் தங்கையின் அழகு முகத்தைப் பார்த்தான். இனி முடியாது. இனி இதைப் பார்க்க முடியாது! இதிலிருந்து வெளியேற வேண்டும். எல்லாவற்றில் இருந்துமே வெளியேற வேண்டும். சனங்களை மெதுவாக விலக்கிக் கொண்டு முற்றத்துக்கு வந்தான். இவனையே பலர் பார்த்தனர். பலர் பார்ப்பது மேலும் எரிச்சலையும் இயலாமையையும் காட்டியது. முற்றத்தின் கோடியிலுள்ள கமுகுமரம். இவன் எப்போதும் ஆறுதலடையும் கமுகு மரம். அதனடியில் அமர்ந்துகொண்டான். முழங்கால்களில் கைகளை ஊன்றி உள்ளங்கையில் முகம் புதைத்தான்.

"ரண்டு நாளா ஆள் சாப்பிடேல்லையாம்"

"கவலை இருக்குந்தானே. அண்ணன் தங்கச்சி மாதிரியே புழங்கினதுகள் அதுகள். சிநேகிதர் மாதிரியெல்லே திரிஞ்சதுகள்"

"இவண் ஒண்டுக்குங் கிறுங்க மாட்டான் எண்டு சொல்லிச்சுதுகள். இப்ப துவண்டுபோய்க் கிடக்கிறான்"

"ஆராவது கூட்டிக்கொண்டு போய் ஏதன் சாப்பாட்டைக் குடுங்கோவன். ஆளுக்காள் நிண்டு ஞாயம் பிளக்கினாச் சரியே"

செத்த வீட்டுக்கு வந்த சனங்களின் கதைகள் எங்கோ கிணற்றினுள் இருந்து கதைப்பது போல் கேட்டன ரகுவிற்கு.

அருளண்ணை கிட்ட வாறது மாதிரிக் கிடந்தது.

வந்திட்டார்.

இவன்ரை கையைப் பிடிச்சார். இவனாலை தவிர்க்க முடியாம அவற்றை கையைப் பிடிச்சுக் கொண்டு விசும்பினான்.

"டே விசரா இதுக்கெல்லாம் இப்பிடி அழுறதே? எழும்படா. எழும்பி ஆகவேண்டிய வேலையைப் பார். ஆம்பிளை மாதிரி இரு. அவளைப் பாத்தியே. எவ்வளவு மரியாதையோடு செத்தாள் எண்டு, அவள் வீரி! நீ என்ன பேத்தை மாதிரி நிண்டு அழுறாய்! எழும்படா, எழும்பு முதல். எழும்பி ஏதன் தின். பரிசுகெடப் போகுது. எவ்வளவு இளசுகள் எல்லாம் உன்னையே பாக்குது தெரியுமே.....!"

அருளண்ணை காதுக்கை வந்து உறுத்திச் சொன்னார்.

தன்னைச் சுதாரித்துக் கொண்டு ரகுநாதன் கேட்டான் -

"சுரேஷ் வருவானோ அண்ணை?"

"நல்ல கதை! அவன் வராமல் எடுக்க விடுவனே பிரேதத்தை. இல்லை! ஆரன் கதைக்கட்டன் பாப்பம்!" என்றார் அருளண்ணை, செத்தவீடே அதிரும்படி.

ரகுநாதன் இப்பொழுது கேவிக்கேவி அழ ஆரம்பித்தான்.

(இனி)

---



"மக்கள் சிரமப்படக் கூடாது என்றுதான் அவர்களுக்காகப் பொலிசாரை வாக்களிக்கச் செய்தோம். இத்திட்டம் வெற்றியளித்திருப்பின் இனிமேல் சகல தேர்தல்களிலும் படையினரே மக்களுக்காக வாக்களிக்கும் வசதி ஏற்பட்டிருக்கும். அதற்கிடையில் எதிர்க்கட்சிக்காரர்கள் நாங்கள் கள்ள வாக்குகள் போடுவதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள்"

- சீனு -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- இளவாலை விஜயேந்திரன்

# வாழ்க்கை வழியில் சிலபேர்

## ஒறேற்றர் சி.சுப்பிரமணியம்



வாழ்க்கையில் சில பேர் மீதான மதிப்பு, அவர்களோடு கண்டு பழகி ஏற்படுவது. (மதிப்பு மட்டுமல்ல எரிச்சலும் இத்தகையதே) வேறுசிலர் மீதான மதிப்பு, அவர்களை அருகிலிருந்து பார்த்ததால் ஏற்படக் கூடியது. அதைவிட, சிலபேர் மீதான மதிப்போ அந்தச் சிலபேரைக் கண்டிருந்தும், அவர்களோடு அருகிற் செல்ல முடியாமையிலும் ஏற்படக் கூடியது. இவற்றுக்கெல்லாம் அப்பால், ஒருவரை வாழ்க்கையில் சந்தித்தேயிராமல் அவர் பற்றிய செய்திகளை, அவரது மதிப்பிற்குரிய செயல்களைப் பற்றி அறிந்து ஏற்படும் மதிப்பு அரிதானது. அண்மையில் மறைந்த திரு ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் அவர்கள் மீது நான் கொண்டிருந்த மதிப்பும் இந்த வகையினதே.

ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன், ஒரு பின்னடைந்த சமூகத்தின் வெளிச்சக் கீறுகளாகத் தங்களைக் காட்டிக் கொண்டவர்களில் ஒறேற்றர் முக்கியமானவர். தேர்தலைப் பகிஷ்கரிக்க முடியும் என்று (இப்போதைய இயக்கங்களுக்கெல்லாம் வெகுகாலம் முன்பே) யாழ்ப்பாணத்தில் வாலிபர் காங்கிரஸ் நிரூபித்துக் காட்டியது. அதன் செயற்பாட்டில் முக்கிய பங்கு ஒறேற்றர் அவர்களுக்கு இருந்தது. ஆங்கிலப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் இணைத்துக் கல்வி கற்பித்து ஏனைய பல கல்லூரிகளுக்கு முதன்மையாக ஸ்கந்தவரோதயாக் கல்லூரி திகழ அதன் அதிபராக இருந்த ஒறேற்றர் காரணமாயிருந்தார். சாதி வேறுபாட்டைக் களைய சமபந்தி போசனம் நடத்தியதிலும் முன்னின்றவர் ஒறேற்றர்.

ஒறேற்றர் எமது தலைமுறையில் மகாஜனக் கல்லூரியில் படித்த

www.tamilarangam.net

மாணவர்களுக்கும் நன்மை புரிந்திருக்கிறார். எனது கல்வி வரலாற்றில் தலைசிறந்த அதிபராக நான் சந்தித்த திரு.பொ.கனகசபாபதியை மகாஜனக் கல்லூரிக்குத் தந்தவரும் அவரே. திரு.கனகசபாபதி அவர்களை மகாஜனாவுக்கு ஆசிரியராகத் தர அவர் முன்வந்தபோது, மகாஜனாவின் அப்போதைய அதிபர் திரு.தெ.து.ஜெயரத்தினம் அவர்கள், "ஒரு செல்லாக்காசை என்னிடம் விற்கப் பார்க்கிறீர்கள்" என்றாராம். அந்தச் செல்லாக்காசு பிறகு மகாஜனக் கல்லூரி அதிபராகி அதன் வளர்ச்சியை வேகமாக முன்னெடுத்தபோது தங்கக் காசாகியதைப் பார்க்க அதிபர் ஜெயரத்தினம் உயிரோடு இருக்கவில்லை. நாங்கள்தான் இருந்தோம்.

ஒருவர் இறந்த பிறகே அவர் பற்றிய மதிப்பீட்டிற்கு வர எங்களால் முடிகிறது. மரணத்தின் பின்பே, அவரைப் பற்றி எழுதுகிறோம், பேசுகிறோம். ஓறேற்றரைப் பற்றிப் பனிமலரில் இரு வருடங்கள் முன்பு வந்த பேட்டி விதிவிலக்கு. மதிப்பிற்குரிய ஒரு மனிதர், சமகாலப் பிரச்சனைகள் பற்றிக் கொண்டிருந்த கவலையுடன் இறந்துபோனார் என்பது துயர் தருகிறது. நாங்கள் அந்தக் கவலையுடன், பிரிவுத்துயரையும் சேமித்துக்கொண்டு வாழும்படி நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறோம்.

## எஸ்.வாசுதேவன்

ஏறத்தாழப் பதினேழு, பதினெட்டு வருடங்கள் இருக்கும் அந்த மனிதரைச் சந்தித்து. அந்தச் சந்திப்பு எமக்கிடையிலான முதற்சந்திப்பு. அண்மையில்தான் அந்தச் சந்திப்பு எமக்கிடையிலான இறுதியுமான சந்திப்பு என அறிய முடிந்தது. இளைய ஈழமே எழுந்திடாய்' என்று முழங்கி ஆரம்பமாகும் வானொலி நிகழ்ச்சியான சங்கநாதத்தின் தயாரிப்பாளராக இருந்த எஸ்.வாசுதேவனின் சுயமரணம் பற்றிய செய்தி அண்மையிற் கிட்டியது.

புத்திளம் பருவத்தில் அனேகருக்கு இருந்திருக்கக்கூடிய வானொலிக் கனவுகள் எனக்கும் இருந்தன. சனிக்கிழமை மாலைகளில் ஒலிபரப்பாகிய சங்கநாதம் என்ற தேசிய சேவையின் இளைஞர்

நிகழ்ச்சி, எனதும் கவனத்தை ஈர்த்திருந்தது. கவிதை என்று நம்பி நான் எழுதிக் குவித்த பல சங்கதிகள், அதில்தான்

ஒலிபரப்பாயின. வி.என்.மதியழகன் தயாரித்து வழங்கிக் கொண்டிருந்த அந்த நிகழ்ச்சியைப் பின்நாளில் தயாரித்தவர் எஸ்.வாசுதேவன்.

சங்கநாத நிகழ்ச்சிகளில் நாடகத்தில் வாராந்தம் பங்கெடுக்கும் எனது

அண்ணாவின் வாசுதேவனுடனான சி

நேகிதம், எனக்கும் அந்த நிகழ்ச்சியில் நேரடியாகக் கலந்துகொள்ளும் ஒரு வாய்ப்பை அளித்தது. எத்தனை ஆயிரம் பேர் கேட்பார்களோ என்று பயந்தபடி இலங்கை வானொலியின் ஒலிவாங்கிக்கு முன்நின்ற அந்த நிகழ்கணம், இப்போதும் பசுமையாக மனதில் நிற்கிறது.

ஒரு கண்ணாடி, சிகரெட் இவைகளும் அந்த மதுரமான குரலும், எளிமையும்தான் வாசுதேவன் பற்றி இப்போது என் மனதுள் எஞ்சியுள்ள பிம்பங்கள். ஓரிரு மணி நேரத்துக்குள், என்னால் அந்த மனிதனைப் பெரிதாகப் புரிந்துகொண்டிருக்க முடியாது.

ஆனால் வாசுதேவன் பற்றிய அபிமானம், அறிவிப்பாளராக, நடிகராக வளர்ந்த அவரது ஆற்றல் பற்றிய மதிப்பு என்னுள் பலகாலமாக இருந்தது. அண்மையில் அவர் தன்னைத்தானே கொலை செய்து


www.tamilarangam.net

கொண்டார் என்ற செய்தி, நம்புவதற்குச் சிரமமாக மாத்திரமல்ல, மனதிற்கு ஒரு அழுத்தமான பாரமாகவும் இருந்தது. எனக்குத் தெரிந்த அனேகர் இப்போது உயிரோடு இல்லை. அவர்களில் தமது முடிவைத் தாமே தேடியவர்களது எண்ணிக்கை மிகக் குறைவு. வாசுதேவன் இறந்ததைவிடத் துயரம், அவர் அந்தச் சிலரில் ஒருவராகிப் போனமைதான்.

## வ.பொன்னம்பலம்

அளவெட்டியில் 1970ல் ஒரு பெரும் பொதுத் தேர்தற் கூட்டம். ஊரில் புகழ்பெற்ற நாடக நடிகன் ஒருவன் (சி.ரி.மகானாக இருக்கலாம்) "வாக்காளப் பெருமக்களே அளவையூர் நன்மக்களே" என்று, குற்றால அருவியிலே குதித்து வந்த தமிழிலே வற்றாத பேரழகே' என்ற பாடலின் மெட்டிற் பாடிச் சபையோரைக் கவர்கிறான். கோயிலடியில் நிகழ்ந்த அந்தக் கூட்டத்திற்கு வீதியெல்லாம் சிவப்புக் கொடிகள் பரவிநிற்கின்றன. சனம், அலைகடல் மாதிரி. பத்துமணியளவில்தான் வேட்பாளர் மேடைக்கு வருகிறார். பல மேடைகளில் பேசிக்கொண்டு செல்வதால் அங்கு வரத் தாமதமாம். கூட்டம் இனந்தெரியா மந்திரத்திற்குக் கட்டுப்பட்டு நின்றதை அன்று காண முடிந்தது. அன்று அந்த மேடையில் முழங்கிய வ.பொன்னம்பலம், இன்று இல்லை. அண்மையில் இன்னொரு தேசத்தில் இருந்து அவரைப் பற்றிய மரணச் செய்தி வந்தது.

தேர்தலிற் தோல்வி அடைந்தாலும், தொகுதி முழுவதும் அபிமானத்துக்குரிய, இளைஞர்களின் கவனத்தைக் கவர்ந்தவராக இருந்தவர் வி.பி. என அழைக்கப்பட்ட வ.பொன்னம்பலம். "சமூகத்தில் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும்" என்று விரும்பிய இளரத்தங்களின் கனவையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு



வந்தால் தமது வாழ்வு ஒருபடி உயரும் என்ற விவசாயிகளின் கனவையும் வாக்குகளாகத் திரட்டியவர் வ.பொ. 1975ல் காங்கேசன்துறைத் தொகுதியில் இடைத்தேர்தல் நிகழ்ந்தபோது, தமிழினத் தலைவராக அப்போது கருதப்பட்ட தந்தை செல்வாவுக்கு எதிராக ஒன்பதாயிரம் வாக்குகள் பெற்றுக் காட்டியவர் அவர். பிறகு, தமிழீழக் கோரிக்கை வலுப்பெற்று, இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளில் தமிழர்களுக்கு முற்றாக நம்பிக்கை இல்லாது போனபோது செந்தமிழர் இயக்கம் ஆரம்பித்தார் வ.பொ. அந்த வண்டியும் ஓடவில்லை. அரசியலில் இருந்தும் நாட்டில் இருந்தும் ஒதுங்கினார் அவர்.

எளிமையான மனிதராகவும், மற்றவர்களது கருத்துக்கு மதிப்பளிக்கும் ஒருவராகவும், பொதுப் பிரச்சனைகளில் தனது பங்கை வழங்குபவராகவும் எனக்கு வ.பொ.வைத் தெரியும். அவரது அரசியல் எனக்கு

www.tamilarangam.net

ஒருபோதும் உடன்பாடானதல்ல. "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்" என்றால் அது, பாராளுமன்றத்தின் ஊடாகச் சாத்தியப்படும் ஒரு விஷயம் அல்ல. அவர் அதை நம்பினாரா நம்பிய மாதிரி நடித்தாரா என்பதல்லப் பிரச்சனை. ஏராளம் இளைஞர்களைத் தன்பின்னால் திரட்டிச், சமுதாய மாற்றம் பாராளுமன்றத்தின் இடதுபுறக் கதவிலிருந்து நாட்டுக்குள் வருகிற ஒரு சங்கதி என்பதுபோல் நம்ப வைத்து நாசமறுத்தவர் அவர் என்பதுதான் பிரச்சனை. தமிழரது சுயநிர்ணய உரிமைக்குரலைப் பற்றிக் கவலைப்படாத ஓர் இடதுசாரிக்கட்சியின் பின் பலரது நேரத்தை மினைக்கடுத்தியவர் அவர். அவர் அரசியலில் இருந்து விலகியது, ஏற்கனவே அவர் ஒரு நல்ல மனிதராகத் தன்னைக் காட்டிய சில விடயங்களுடன் சேர்த்துக் கணக்கிடப்படக் கூடியது.

## வித்துவான் மாஸ்ரர்

மகாஜனக் கல்லூரியில் என்னோடு கல்விகற்ற மாணவர்களிடம், கல்லூரியிலேயே அமைதியான ஆசிரியர் யாரெனக் கேட்டால் அனேகர் வித்துவான் மாஸ்ரர் என்றே கூறக்கூடும். அமைதியைத் தனது இயல்பாகக் கொண்டிருந்த அவரிடம் அமைதிக்குள் புதைந்திருந்த ஆற்றல்கள் பற்றிய சரியான மதிப்பீடு என்னிடம் அப்போது இருந்திருக்கவில்லை.

கல்லூரியில் செவ்வாய்க் கிழமைகள் தோறும் நிகழும் அசெம்ப்ளி'யின் இறுதியில், மாணவர்களால் எழுந்துநின்று பாடப்படும் கல்லூரிக் கீதத்தை அவர்தான் எழுதியிருந்தார் என்றும் ஆரம்பத்தில் எனக்குத் தெரியாது. உதைபந்தாட்ட வீரர் முயலு'க்கு சிவானந்தராஜா என்று (உண்மையான) பெயர் இருந்த மாதிரி, வித்துவான் மாஸ்ரருக்கு, புலவர் நா.சிவபாதசுந்தரனார் என்று பெயரிருக்கும் என்று யாருக்குத் தெரியும்?

ஆனால் அப்படித்தான் இருந்தது.

கல்லூரிக் கீதமும், கல்லூரியின் கொடிக்கீதமும் ஏறத்தாழப் பதினைந்து வருடங்களின் பின்னும் வரிபிசகாமல் மனதுக்குள் இருக்கும்படி யாத்துவைத்த அந்த வித்துவானை, நாங்கள் மறுபடி பார்க்க முடியாது. நல்லவேளையாக அவர் உயிருடன் இருந்தபோதே அவரது நூலொன்றுக்குப் பரிசு வழங்கி இலங்கைச் சாகித்திய மண்டலம் பெருமை பெற்றது. அவரிடம் கற்காமலே அவரைப் பற்றி மரியாதை வைத்திருக்கக்கூடிய பல ஆயிரம் மாணவர்களில் நானும் ஒருவன். இதை அவரிடம், அவர் உயிரோடு இருந்தபோதே சொல்லியிருக்கலாம். முடியவில்லை, காலம் தன்பாட்டில் போய்க் கொண்டிருக்கிறது.

---

## ஆசியாவின் பலம்!

உலகின் பல நாடுகளில், முக்கியமாக முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும் அதேவேளை சில ஆசிய நாடுகள் அபரிமித வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றன. இவற்றின் சராசரி வளர்ச்சி ஏழு வீதமாக கடந்த வருடம் இருந்தது. இந்த நாடுகளில் சராசரித் தனிநபர் வருமானம் நான்கு வீதத்தால் அதிகரித்துள்ளது.

ஆசியாவில் முக்கியமாக சீனா, இந்தியா, மலேசியா, தாய்லாந்து, வியட்நாம் என்பனவே வளர்ச்சியில் அதிக வேகம் காட்டுகின்றன. சீனாவின் கடந்த வருட வளர்ச்சி 14வீதம். அமெரிக்காவுடனான புதிய உறவே வியட்நாமின் வளர்ச்சிக்கான முக்கிய காரணம். இலங்கை? பார்க்கலாம்.

— மாது —

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

● தங்கா



# சிங்கள தேசம்

சிங்களவர் தேசம்

(முன்தொடர்)

கபறணையில் இருந்து அன்புவழிபுரம் (திருமலையிலுள்ள கிராமம்) அடையும்வரை உள்ள இராணுவ காவலரண்கள் எண்ணிலடங்கா. அதேபோல் கெடுபிடிகளும்· பரிசோதனை முறைகளும் விவரிக்க முடியாதவை. அங்கு பெண் இராணுவத்தினரையும் காண முடிந்தது. ஆனால் பெண்புலிகள் போன்ற கம்பீரமோ, போராடும் யுத்த மூர்க்க குணாம்சத்தையோ காணமுடிவதில்லை. இராணுவ உடைக்குள், ஆண் சிப்பாய்களுக்கு அல்ப எதிர்ப்பால்ச் சந்தோசத்தைத் தரும் சாதாரண சிங்களப் பெண்ணைத்தான் காணமுடிந்தது.

வீதிகளைப் போலவே நீண்டு வளர்ந்து இருமருங்கும் ஓடும் காடுகள் ஒரு அமைதியான பயத்தைத் தருகின்றன. புலிகள் மட்டக்களப்பிற்கும் முல்லைத்தீவுக்கும் செல்வதற்காக இப்பகுதிகளில்தான் காடு மாறுவார்களாம். மிக அதிக தூரமில்லாத இடைவெளிகளில் அமைந்த ராணுவ காவலரண்களை உடைத்துப் புலிகள் எப்படிக் காடு மாறுகிறார்கள் என்று கேட்கிறேன். புலிகள் காடு மாறுவது இரு ராணுவ முனைகளிலும் உள்ள சிப்பாய்களுக்கு நன்கு தெரியும். புலிகள் வானை நோக்கி வேட்டுகளைத் தீரத்தபடியேதான் காடு மாறுவார்கள். "நாங்கள் அவங்களைச் சுட்டா எப்பிடியும் 3,4 பேர் விழுவாங்க. எங்கள்ளயும் ஆறேழுபேர் விழலாம். சும்மா காடுதானே மாறிப் போறாங்க, சண்டைக்கு வரேல்லதானே. அதனால சுடமாட்டம்" இது என் நண்பர் ஒருவருக்கு ஒரு சிங்களச் சிப்பாய் (இருவருக்கும் நல்ல பழக்கமாம்) கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம். புலிகள் காடுமாறும்போது சிறிய காவலரண்களில் இருக்கும் சிப்பாய்கள் தலைகளைத் தரையில் வைத்துப் படுத்துவிடுவார்களாம். சிலர் அப்படியே தூங்கிவிடுவதும் உண்டாம். இதுதான் கூலி வாங்கும் சிங்களச் சிப்பாய்களின் தேசப்பற்று நிறைந்த யுத்த குணாம்சம். ஒருவகையில் புலிகளின் அதிகரிக்கும் பலத்திற்கும் இதுவும் ஒருவகைக் காரணமாகலாம்.

திருகோணமலையில் ஈபிடிபி இருப்பதாகக் கொழும்பில் கூறினார்கள். தமிழ் விடுதலை வேங்கைகள் (ஈபிடிபி) எவ்வாறு சிங்கள ராணுவத்துடன் இணைந்து தமிழர் விடுதலைக்காய்ப் போராடுகிறார்கள் எனக் காண ஆசையாயிருந்தது. "ஏன் அவர்களை வெளியில் காணவில்லை" என்று, எனக்கு வழிகாட்டியாக வந்த முன்னாள் ஈபிஆர்எல்எ.்ப் தோழரைக் கேட்கிறேன்.

www.tamilarangam.net

"அவர்கள் திருகோணமலை கோட்டைக்குள் இராணுவ பாதுகாப்புடன் நிர்வாக(?!) வேலை செய்கிறார்கள்" என்கிறார். யாரை நிர்வாகம் செய்கிறார்கள்?! கொழும்பிலிருந்து துரத்தி அடிக்கப் பட்டவர்களாயிற்றே. வேறு சில இடங்களில் கிடைத்த தகவல் மிக வேடிக்கையாயிருந்தது. திருகோணமலையில் சிங்களவர் அடித்தாலும் என்று பயத்தில் கோட்டைக்குள் இருக்கிறார்களாம். (பாவிகள் போற இடம் பள்ளமும் பிட்டியும். தற்காலிகமாகவாவது தமிழர்கள் இவர்களிடம் இருந்து தப்ப வழி கிடைத்திருக்கிறது)

எனது வழிகாட்டி, ஈபிஆர்எல்எ∴ப்பின் பலாத்கார ஆட்சேர்ப்பு முறைக்கு எதிராக உள்ளுக்குள் இருந்து குரலெழுப்பி, இயக்கத்திலிருந்து வெளியேறியவர். அவர், 'புலிகள் திருகோணமலையை அசைக்கமுடியாது" என்கிறார். அப்படியானால் திருகோணமலை பூரண இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளதா?

மாலை ஆறு மணியானதும் யுத்தஓசை இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு கிண்ணியாக் காடுகளூடே யுத்த அலைகள் அடித்தவண்ணம் இருக்கும். திருகோணமலை நகரத்தை - சுமார் மூன்றரை மைல் சுற்றளவை - கெடுபிடி நிறைந்த யுத்தமுனைக் கட்டுப்பாடுகளுடன் இராணுவம் வைத்திருக்க முயல்கிறது, அல்லது திணறுகிறது என்பதே உண்மையாக இருக்கும்.

உணவுப் பொருட்களின் விலையுயர்வும், மாலை ஆறு மணிக்குப் பின் திருகோணமலைக்குள் எந்த வாகனமும் (புகையிரதம் உட்பட) நுழைய உள்ள ராணுவத் தடையும் திருமலை மக்களின் நாளாந்த வாழ்வைப் பெரும் கஷ்டத்திற்குள்ளாக்குகிறது. இதுதவிர காடுகளில் நடக்கும் யுத்தம் வேறு.


இவற்றிற்கிடையில் அரசு கூறுவதுபோல 'கிழக்கில் வழமையான நிலைமை உள்ளது' என ஒருவர் நம்புவாரானால், பாவம் அவர் ஏமாந்துவிடுவார். முழுமையான பரிசோதனையின் பின்புதான் ஒருவர் திருகோணமலை பஸ் நிலையத்திலேயே நுழையமுடியும். மாலைவேளையில் மிகக் கலகலத்திருக்கும் திருகோணமலை கடற்கரை, இன்று வெறிச்சோடிக் கிடப்பதே வழமையற்ற நிலைக்கு மிகப் பொருத்தமான சாட்சி.

கிழக்கில் புலிகளின் மக்கள் பலம் எப்படி? வடக்குப் போல் பரவலான ஆதரவு கிழக்கிலும் புலிகளுக்கு உண்டுதான். "அவங்கள் (புலிகள்) கடைசிவரைக்கும் திருகோணமலையை விடமாட்டாங்கள்" என்ற பரவலான பலமான குரல்களைக் கேட்க முடிந்தது. ஆனாலும் "ரெண்டும் (புலிகள், ராணுவம்) ஒன்றுதான். பெரிய வித்தியாசமில்லை" என்ற குரல்களும் அடக்கமாக வாசிக்கத்தான் படுகின்றன.

"புலிகள் திருகோணமலையைக் கைப்பற்றும் வாய்ப்பு எப்படி?" என்று கேட்கிறேன். பாரிய ராணுவக் கோட்டையையும், பெரிய கடற்படைத் தளத்தையும் சுற்றிக்காட்டிய ஈபிஆர்எல்எ∴ப் முன்னாள் தோழர், "இக்குடாக்குள் புலிகள் யுத்தம் புரிந்து உள்நுழைவது கனவுதான். விரும்பினால் இரகசியமாக சாதாரண உடையில் (ஆயுதமின்றி) வந்து போகலாம்" என்கிறார்.

கொழும்பு வருவதற்காக நானும் எனது நண்பரும் அவரின் மனைவி பிள்ளையுடன் புகையிரத நிலையத்தில் நிற்கிறோம். புகையிரத நிலையம், கொழும்பு விமான நிலையத்தை ஞாபகப் படுத்துகிறது. குறிப்பிட்ட எல்லைக்கப்பால் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும். அவ்வெல்லையில் ஒரு காவலரண். அதில் கடுமையான பரிசோதனை. டிக்கட் வாங்கியதும், மீண்டும் உடைமைகள் கெடுபிடிகளுடன்

www.tamilarangam.net




கூடிய பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகிறது. கொழும்பு வரும்வரையில் புகையிரதம் சோதனைக்காக நிறுத்தப்படவில்லை. ஆனால் புகையிரதத்தினுள் அங்குமிங்கும் திரியும் பொலிசாரும் இராணுவத்தினரும் பயணிகளை, குறிப்பாக தமிழ்ப் பயணிகளை ஒருவழி பண்ணிவிடுகிறார்கள். எங்களுக்கு ஒரு ஆறுதல். எங்களுடன் பயணம் செய்தவர் கடற்படையில் பணிபுரியும் இளம் அதிகாரி. எனது நண்பருடன் விளையாடத் தொடங்கிய கடற்படை அதிகாரி, தனது கடற் கண்காணிப்பு, யுத்த அனுபவங்களை மேலெழுந்த வாரியாய்க் கூறுகிறார். அவருக்குப் பக்கத்தில் அவரது சிங்கள (கர்ப்பிணி) மனைவி. கடற்படை அதிகாரி மும்மொழிகளிலும் சரளமாக உரையாடக்கூடிய பறங்கியினத்தவர். யாழ் கொழும்புப் புகையிரதத்தின் கனவு இருக்கையான மூலை இருக்கைகளில் (corner seat) ஒரு முஸ்லிம் கணவன் மனைவி. (முஸ்லிம்களின் வசதியான இருப்பைத்தான் நாம் மறுத்துவிட்டோமே)

யாருமே எதிர்பாராத ஒருவேளை, எமது நாட்டில் என்றுமே சாத்தியப்படாத ஓர் ஒற்றுமை அந்த இரு இருக்கைகளிலும் இருப்பதை உணர்கிறேன். ஒரு பறங்கி இனக் கடற்படை அதிகாரி, அவரது அழகான சிங்கள மனைவி, முஸ்லிம் இனக் கணவன் மனைவி, நாங்கள் தமிழர்கள்.

எமது அரசினாலும், அரசியல்வாதிகளாலும், இயக்கங்களாலும் மிகச் சிக்கலாக சிதைக்கப்பட்ட இனங்களின் சேர்க்கைக்கு மாறான ஒரு சேர்க்கையை நான் அங்கு காண்கிறேன். நாடு பிரிந்தாலும் பிரியாவிட்டாலும் இப்படி ஒரு சேர்க்கை நாட்டில் வருமா? வந்தால், மிகக் கற்பனையான ஆச்சரியம்தான்.●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நாட்டுக்கூத்து

<u>யாழ்தேவி - மாவீரர்தினம்</u>

ஒரு நாடகமுயற்சி நேர்த்தியான பிரதியினால் அல்லது மேடையில் சிறப்பான நிகழ்த்திக் காட்டலினால் வெற்றி பெறலாம். பிரதியும் நிகழ்த்திக் காட்டலும் ஒன்றை ஒன்று நேராகவோ அன்றி எதிராகவோ பாதிப்பதனால்கூட ஒரு நாடகம் வெற்றியை அல்லது தோல்வியைத் தழுவிவிடலாம். சர்வேயின் யாழ்தேவி நிகழ்த்திக் காட்டலில் இருந்த ஓரளவு சிறப்பினைப் பிரதியின் குறுகலான எனும்போது பெண்ணானாலும், ஆணானாலும் சமநிலையில் நிறுத்தி விமர்சிப்பதே சரியான கண்ணோட்டம். பெண்களின் கலைநிகழ்வுகளை மட்டும் பாராட்டுவது ஒன்றுதான் சரியான விமர்சனம்; அதுதான் பெண் சம உரிமை என்று எங்கு கற்றார் இவர். இதுதான் பெண் விடுதலைக்கு எதிரான அம்சம் என்பது இவருக்குத் தெரியாதா? (வாசித்து அறிய இப்சனின் 'ஒரு பொம்மை வீடு') "குடும்பச் சுமை கூட. ஒருமாதிரிப் பார்த்துப் பாராட்டி விடுங்கோ - அதுதான் நல்ல விமர்சனம்" என்பது ஒரு பாப்பாத்தனம். எதிராக விமர்சித்தால் "இந்தா வெட்டிறன் பிடுங்கிறன், ஓயாமக் கதைச்சதாக் கதை கட்டுறன்" என்று என்று சபதமா?

* குட்டி மாஸ்ரர் ஒரு ஆரோக்கியமான கலை நிகழ்வுகளைத் தரக்கூடிய திறமைகளைக் கொண்ட கலைஞர்; அவரின் திறமைகளின் பரிமாணங்கள், காசுக்குப் போடப்பட்ட மெட்டுடைய நாலாந்தர சினிமாப் பாட்டுடன் நின்றுவிடக் கூடாது என்பது விமர்சகரின் ஆதங்கம்.

இவ் ஆரோக்கியமான கருத்துகள் விமர்சன வரிகளூடே கலந்து மறைந்து நிற்பது உங்கள் (தூஷண) அறிவுக்கு விளங்கவில்லைப் போலும்.

சில நிகழ்வுகள் விமர்சனத் தரத்தை எட்டுவதில்லை. ஒளிவிழா நிகழ்வுகளும் ஏறக்குறைய விமர்சனத் தரமற்றவையே. தவறி இவையும் சிலசமயம் விமர்சனம் செய்யப்படுகின்றன. அவற்றின் சரிபிழைகளைக் கலந்துரையாடாது, போர்முரசறைவது ஆக்கபூர்வமானதல்ல.

<u>ஒளிவிழாவின் புத்தக அறிமுகம்</u>

பார்வை வென்றுவிட்டது. அடித்துத் துரத்தல் (அல்லது அடித்தல்)தான் அரசியல் செய்தி என்ற மட்டமான 'பரவசப் பகிர்வு' ஒன்றே அங்கு காணப்பட்டது. யாழ்தேவி (ராணுவ நடவடிக்கை) முறியடிப்பு என்ற அடக்கமுடியாத பரவசம் - சிங்கள இனவாதப் பாத்திரங்கள் ஊடாகத் தமிழ் இனவாதிகளுக்கான மாமிசத் தீனி என்ற மட்டிலும்தான் பிரதி கையாளப் பட்டிருந்தது. அதற்கப்பால் உள்ள அதன் அரசியல் விளைவுகள் ஏதும் மறந்துபோயும் தொடப்படவில்லை. உணர்ச்சி மேலோங்க நாடகத்தோடு ஒன்றவரும் பார்வையாளனை, தடுப்புப் போட்டு நிறுத்திச் சொல்லப்பட்ட விஷயம் யாழ்தேவியில் ஒன்றுமில்லை. சிக்கலால் சிதறிவிட்ட ஈழமக்களின் வாழ்க்கையில் பாடப்பட வேண்டிய பொருள் பல உண்டு. அதையெல்லாம் அப்புறம் பாடலாம். அவசரம் பாடவேண்டியது 'உவகைமிக்க ஆயுத பரவசம்'தான் என்பதே யாழ்தேவியின் சிறப்புச் செய்தி. அதன் பலவீனமும் அதுதான்.

வாசுகி - சுதேசி

பார்வையாளர்களைப் பற்றியிழுத்து ஆழ்ந்த ரசனையோடு (நாட்டிய) நாடகத்தோடு ஒன்றவிடாது, 'ஓயாது கதைக்க' விடுவதே ஒரு கலையின் (நாடகத்தின்) தோல்விதானே. ஒரு கலைநிகழ்வு தொடர்பான விமர்சனம் எகிறுவது கலைஞனின் பக்குவமின்மை, விட்டேறித் தனத்தைத்தான் காட்டும். முதலில் விமர்சனத்தை விளங்கவும், தவறுகளை ஏற்றுத் திருத்தவும் கற்க வேண்டும். விமர்சனம் தவறாக இருக்கும்போது, அவ்வகையில் அவ்விமர்சனம் சரியான பார்வையிலிருந்து தவறிவிடுகிறது என்பதைக் கருத்து ரீதியில் அணுகவேண்டும். நாடகம் இயேசுநாதர் புகலிடம் தேடுவதை ஈழத்தமிழரின் சமகாலப் பிரச்சனையுடன் ஒப்பிடுகிறது என்பது நாடகம் முடிந்து, கண்ணனின் விமர்சனமும் வந்தபின் இவர்கள் கிளப்பிவிட்ட புரளி. பார்வையாளர்களுக்கு நாடகம் நடத்தும்போது எல்லாவற்றையும் மறைத்து வஞ்சனை செய்துவிட்டு, இப்படிப் புரளிகள் பல விடுவது இவர்களுக்கு எளிதுதான்.

சுதேசி அவர்களே,

அன்ரனி தியோபிலஸ் (புகலிடம் தேடியே) தான், பாலேந்திராவுடன் பணியாற்றியவர் என்று கண்ணன் விமர்சனத்தில் கூறுகிறார். நீங்கள் பாலேந்திராவை ஜோன்சனுடன் (பேதங்கள் இல்லையடி பாப்பா) ஒப்பிடுவதாக பேதமின்றிப் பாப்பாத் தனமாக எழுதுகிறீர்கள்.

* பணியாற்றல் வேறு, ஒப்பீடு வேறு. அதையும் ஆள்மாறாட்டம் செய்துவிட்டீர்கள். எழுதமுன் விமர்சனம் வாசிப்பதில்லை

நிகழ்ச்சி அமைப்பாளர்களால வெளியிடப்பட்ட சுட்டும் சுடரொளி எனும் புத்தக அறிமுகம்/ விமர்சனம் நிகழ்ந்தது. தமிழ்ச் சங்கத் தலைவி திருமதி.நாகராஜா நிகழ்த்திய அந்த விமர்சனத்தில் ஒரு சிறு பகுதி, மிச்ச விமர்சனத்தைப் பற்றி விளங்கப் படுத்தும். புத்தகத்தில் ஒரு கவிதையில், குளிர்கால இரவொன்றின் இழுத்து மூடப்பட்ட போர்வைக்குள் கிடந்த உடலிலிருந்து ஒரு கவிஞன் ஆன்மா தன் தேசம் தேடிப் பயணிக்கிறது.

"ஊர்போய்/ உள்ள அவலங்கள்/ பார்த்துத் துயரமுறும்/ திசையற்று/ நடுக்கடலில் தவிப்புற்றும்/ வாழ்கின்ற மக்களிடை/ வார்த்தையற்று அலைப்புண்ணும்/ திரும்பி

அசுகர் ° °

கடிதங்கள்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வந்து/ மூடிக் கிடக்கின்ற/ இமைவிரித்துக் கண்களுக்கு/ சிவப்பெழுதும்"

விஜயேந்திரனின் 'நாள் தொடர்கிறது'

தன் தேசம் பிரிந்தபோதும் தேசம் நோக்கிய உணர்வு அவஸ்தைகளை, ஆன்மா படும் வதைகளைத் தன் தேசம் படும் துயரங்களை அவன் தன் எழுத்து வரிகளூடே ஒரு சிற்பமாக எவ்வளவு ரணவேதனையுடன் படைத்திருக்கிறான். காட்சி கவிதையில் ஓர் அழகிய ஓவியம் போல் மனத்திரையில் சோகமாய் விரிகிறது.

விமர்சித்தவர் என்ன கூறினார்? "அவர் (கவிஞர்) தன் சொந்தக் கற்பனையைக் கூறியிருக்கிறார். சொல்ல ஒன்றுமில்லை. அதனால் அதை விட்டுவிடலாம்" என்கிறார். அவர் கூறிய தொனி, 'கவிஞர் ஏதோ குற்றம் செய்துவிட்டார். அவரை மன்னித்துவிடுவோம்' என்பதுபோல் இருந்தது. தமிழர்களாகிய நாம் என்ன பாவம் செய்தோம்?

○ யோகி

(கையொப்பம்)

கனம் சுவடுகளுக்கு,

சுவடுகள் இன்றைய காலத்தின் தேவை. இது தனிநபர்கள் தமது தனிப்பட்ட தாக்குதலுக்காகக் களம் கொடுப்பது

○○

விமர்சனத்தால் காப்பாற்றப்படுவதைவிட, புகழ்ச்சியினால் அழிந்துபோவதையே பெரும்பாலோர் விரும்புகின்றனர்.

நார்மன் வின்செண்ட் பீல்

○○

## கலைஞர்களும் விமர்சனமும்

புரட்சி, இளையராஜா, தூசணை என்றெல்லாம் பல " விடயங்களைக் " கொண்டிருந்த திரு.சுதேசியின் கடிதத்தில் பதிலளிக்கலாம் என்று தோன்றிய விடயங்கள் மூன்று. ஒன்று, விமர்சனம் பற்றி அவர் கொண்டிருக்கும் விளக்கம் பற்றியது. கலை, இலக்கிய விவகாரங்களில் விமர்சனம் (critcism) என்பது ஒரு படைப்பில் தவறுகளை, குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுதல் (pointing out faults), மதிப்பீடு (evaluate) செய்தல் என்றே அர்த்தம் கொள்ளப்படுகிறது. குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதனால் விமர்சனம் negative ஆனதாக, (பாராட்டுகளை மட்டுமே positve ஆகக் கருதுபவர்களுக்கு) தெரிவது இயல்பே. ஒரு படைப்பாளியின் படைப்பாற்றல் செப்பனிடப்படுவதற்கு விமர்சனம் ஒரு முக்கிய காரணமாகும். தனது படைப்பு மற்றவர்களில் பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஒரு கலைஞனின் நோக்கமாகிறது. அந்நோக்கை அடைவதில் படைப்பாளி எந்தளவு வெற்றியைக் கண்டுள்ளான் என்பதை படைப்பாளி அறிந்துகொள்ள விமர்சனங்களே, அதாவது உண்மையான மதிப்பீடுகளே, உதவுகின்றன. இதுதான் பண்பட்ட, பண்பட விரும்பும் கலைஞர்கள் பாராட்டுக்களைவிட,

திரு.சுதேசி எனது விமர்சனத்தை முழுமையாக வாசிக்கவில்லை என்றே கருதுகிறேன். பாலேந்திரா, தாசீசியஸ் போன்றவர்களுடன் அவர்களை ஒப்பிட்டு எனது விமாசனத்தில் எந்தவொரு இடத்திலும் நான் குறிப்பிடவில்லை. ஆயினும் அப்படி ஒப்பிடுதல்கூட ஒரு தகாத காரியமாக நான் கருதமாட்டேன். திரு.ரவிக்குமாரைப்போல " பேதங்கள் இல்லையடி பாப்பா " நாடகக் கலைஞர்களை " சோம்பேறிகளுடன் " ஒப்பிட்டு பாராட்டுவதைவிட, பாலேந்திரா, தாசீசியஸ் போன்றவர்களுடன் ஒப்பிட்டு " மோசம் " என்று சொல்வதே அவர்களை முன்னேற்றத்திற்கு உந்தும்: இத்தகைய விமாசனப்போக்கையே நான் வரித்திருக்கிறேன்.

விமர்சனமென்பது வெறும் " சாடல்களாக " மட்டும் இருந்துவிடக்கூடாது: பாராட்டுதலும் இருந்தாக வேண்டும். அதுதான் விமர்சனம் என்பது விமர்சகர் ரவிக்குமாரின் கருத்து. " சாடுதல் " மட்டுமே சாத்தியமான, பாராட்டும்படியாக எதுவுமில்லாத படைப்புகளாக இருந்தாலும் (தமிழச் சினிமாவிலிருந்து புலம்பெயர்ந்த கலைஞர்களின் படைப்புக்கள்வரை இத்தன்மை கொண்டவையே அதிகம் என்பது எனது கருத்து.) " சோம்பேறிகளுடன்" ஒப்பிட்டாவது

பாராட்டியே தீரவேண்டும் என்று திரு.ரவிக்குமார் பிடிவாதம் பிடிக்கிறார். (அண்மையில் இலண்டனில் யாழ் சீலன் தமிழ்நாட்டுச் சினிமாப் பாடல்களை வாத்தியங்களில் வாசித்து, அதை ஒரு






www.tamilarangam.net

www.tamilarangam.net

விரும்பத்தக்கதல்ல. கடந்த இரு இதழ்களில் சமர், ஜெயபாலன் ஆகியோரின் கடிதங்கள் இந்த வகையானதுதான். ஜெயபாலன் போன்ற ஆய்வாளர்கள் இன்று எமது சமூகத்திற்குத் தேவையானவர்கள். சமர் குறிப்பிட்ட விடயத்தை விட்டு வெளியே போய் தனிநபர் தாக்குதலைத் தொடங்கியது. ஆனால் ஜெயபாலனும் தனது பதில் கடிதத்தில் அதே தரத்துக்கு இறங்கிவிட்டது கவலை தருகிறது. அதற்குப் பதில் தன்நிலையை மட்டும் தெளிவுபடுத்தி இருப்பின் அவருக்குப் பெருமையாக இருந்திருக்கும்.

சுவடுகள் இனித் தனிநபர் தாக்குதலுக்குக் களம் தருவதை நிறுத்தி, ஈழநாட்டிற்கும் சமூகத்திற்கும் புலம்பெயர்ந்த சமூகத்திற்கும் இலக்கியத்திற்கும் களம் தரட்டும். வரவேற்கிறோம். புலம்பெயர்ந்த சூழலில் ஒவ்வொரு பக்கமும் பெறுமதியானது, அவற்றை வீணடிக்காதீர்கள்.

**•ம.சிவகரன்,**
**சுவிஸ்**



CDயாக வெளியிட்டு (Life in a Day என்று அதற்கு பெயர்வேறு!) அலங்கோலம் செய்திருந்தார். ரவிக்குமார் போன்றவர்கள் அவரை உற்சாகப்படுத்துவதற்காக விழா எடுத்த கொடுமையை பத்திரிகையில் பார்த்தேன்.) " கலைத்துறையில் சளைக்காமல் பங்களிப்பவர்கள் தொகை விரல்விட்டு எண்ணுமளவே " இங்கு உள்ளதால் அவர்கள் செய்வதையெல்லாம் பாராட்டியே தீரவேண்டும் என்று நான் கருதவில்லை. அப்படி அவர்கள் தொடர்ந்து மன்னிக்கப்படுவதனால்தான் கிட்டத்தட்ட ஒரு தசாப்தமாகியும் புலம்பெயர்ந்தோரிடமிருந்து தரமற்ற படைப்புகளே அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. இங்குமட்டுமல்ல எங்கும் கலைஞர்கள் " அன்றாடப் பிரச்சினைகள் " பலவற்றிற்கு மத்தியில்தான் கலைத்துறையில் ஈடுபட்டுவருகிறார்கள். ஒப்பீட்டுரீதியில் புலம்பெயர்ந்த கலைஞர்களுக்கு பொருளாதார வசதிகளும், ஏனைய வாய்ப்புக்களும் அதிகம் என்றே சொல்லவேண்டும். சரி, அப்படித்தான் நோர்வேக் கலைஞர்கள் " அன்றாடப் பிரச்சினைகள் " பலவற்றிற்கு மத்தியில்தான் கலைத்துறையில் ஈடுபட்டுவருகிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும், - இவ்வளவு பிரச்சனைக்கு மத்தியிலும் நேரத்தைச் செலவழித்து, ஆர்வத்துடன் கலைத்துறையில் பங்களிப்பவர்களுக்கு, அவர்களின் படைப்புப் பற்றி விமர்சனங்கள்மீது விருப்புடையோராக இருப்பதற்குக் காரணமாகிறது.

எனது விமர்சனம் " பேதங்கள் இல்லையடி பாப்பா " நாடகக் கலைஞர்களை உற்சாகப்படுத்தவில்லை; மாறாக அவர்களை நாடகத் துறையைவிட்டே விரட்டுவதாக இருப்பதாக திரு.சுதேசி அச்சம் கொண்டுள்ளார். என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு படைப்பாளியின் படைப்பை விமாசிப்பதே அந்தப் படைப்பாளியை உற்சாகப்படுத்துவதற்காகத்தான் என்ற கருத்தையே கொண்டுள்ளேன். விமாசனம்பற்றி விளக்கமில்லாத, விமர்சனத்தினால் மனமுடைந்து, கலைத்துறையைவிட்டு ஒதுங்குகின்ற " கலைஞர்களை ", கலைத்துறையை விட்டு ஒதுங்க வைப்பதும் விமர்சனத்தின் ஒரு பணியே. எனது போலியான பாராட்டுகளைவிட, மானசீகமான விமர்சனமே " பேதங்கள் இல்லையடி பாப்பா " நாடகக் கலைஞர்களுக்கு பயனுள்ளது என்று நான் கருதுகிறேன். அந்த இளைஞர்கள் எதிர்காலத்தில் நாடகத்துறையில் சாதனைகள் படைக்க நானும், எனது விமர்சனமும் காரணமாகவிருப்போம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

பிரபல நாடகக் கலைஞர்களான பாலேந்திரா, தாசீசியஸ் போன்றவர்களுடன் " பேதங்கள் இல்லையடி பாப்பா" நாடகக் கலைஞர்களை ஒப்பிட முயன்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையான அபிப்பிராயத்தைச் சொல்வதே நியாயமானதாகும்.
"முதிர்ச்சியடைந்த" கலைஞர்கள் இங்கு இல்லை என்று ரவிக்குமார் சொல்வதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். கலைஞர்களின் முதிர்ச்சியென்பது அவர்களின் படைப்புக்களில் தெரிகின்ற மெருகும், முதிர்ச்சியுமல்லவா! அது அந்தப் படைப்புப்பற்றிய வெளிப்படையான விமர்சனங்களினால் மட்டுமே சாத்தியமாகும்; "மூஞ்சியை முறித்து" விடாமல் அனுசரித்துப் போகும் வழுவழுத்த விமர்சனங்களாலல்ல!

விமர்சனத்திற்கு ஒரு தெளிவான நோக்கு இருக்கிறது. அதற்கென்று சில பண்புகள் இருக்கின்றன. பாராட்டுதல்களைப்போல் இனிப்பாக விமாசனம் இல்லையென்று "சில கலைஞர்கள்" ஆத்திரப்படலாம். அவர்களுக்கு "விமர்சனம் என்பது வசவல்ல; அவமதிப்பல்ல; ஒரு படைப்புப் பற்றிய கரிசனையுடனான ஒரு மதிப்பீடு" என்று விமர்சனம் பற்றிய பிரக்ஞையை அவர்களுக்கு நாம் ஏற்படுத்த முயலாம். அவர்களை விமர்சனத்தை புரிந்துகொள்ளக்கூடியவர்களாக மாற்ற நாம் முயலவேண்டுமே தவிர, அவர்களுக்காக விமர்சனத்தின் இயல்பை மாற்ற முயல்வது அவர்களுக்கோ, நமக்கோ, கலை இலக்கியத்துக்கோ நன்மை பயக்காது என்பதையே விமர்சகர் திரு.ரவிக்குமாருக்குச் சொல்லிக்கொள்ள விளைகிறேன்.

கலைஞர் வாசுகி நீண்டகாலமாக அனுபவம்மிக்க கலைஞர் அறிந்திருக்காதது ஆச்சரியம்தான். தனது நிகழ்ச்சி "இலகுவில் மறக்கமுடியாத" ஒன்று.
"கலைநயம்கொண்டது" என்று தானே புகழ்ந்துகொள்ளும் வாசுகி, மற்றவர்களுக்கும் அதே அபிப்பிராயம் வந்தாகவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். "குறைகளுண்டு" யாராவது சொன்னால், சொல்லப்பட்ட குறைபாடுகள் ஏன் இடம்பெற்றன என்று (வழமையாக கலைஞர்கள் போல) ஆராயவேண்டும் என்றெல்லாம் அவர் யோசிக்கவில்லை. மாறாக சொன்னவன் ஒரு "ஆணாதிக்கவாதியாகவோ", "கலையுணர்வற்றவனா"கவோ இருந்திருக்க வேண்டும என்ற முடிவுக்கே அவரால் வரமுடிகிறது. நிகழ்ச்சியின்போது விமர்சித்தவன் கதைத்துக்கொண்டிருந்தானா (அப்படிப்பார்த்தாலும், பார்வையாளர்களை ஈர்க்கமுடியாத, சோர்வடைய வைத்த நிகழச்சி என்றுதானே பொருள்படும்!) அல்லது கடலை சாப்பிட்டுக்கொண்டிருந்தானா என்று வேவுபார்த்தபடி கலைஞர் வாசுகி எங்கேயோ போகிறார்!

ஊரில், தென்னிலங்கையில், தமிழகத்தில் கலைத்துறையில் சிரத்தைகொண்ட பல கலைஞர்களுடன அவர் பணிபுரிந்ததாக பலசந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டிருக்கிறேன். இவ்வளவு அனுபவமிருந்தும், இக்கலைஞரால் விமர்சனத்தை இப்படித்தான் எதிர்கொள்ள முடியுமென்றால், ரவிக்குமாரும், சுதேசியும் வித்தியாசமாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாதுதான்!

<u>நாம் குறிப்பிட்டதை விவாதிக்காது ஏன் தாவுகின்றீர்கள்</u>

சுவடுகள்54ல் ஜெயபாலன் சமர் என்ற பெயரில் வந்த விமர்சனத்தில் எனது பெயரைக் குறிப்பிட்டு ஒரு தாக்குதல் நடத்தியுள்ளார். சமரின் கருத்துக்குப் பதில் அளிக்க முடியாமற் போனபோது சமரில் உள்ள என்னைக் குறித்துத் தனது ஆதாரமற்ற ஒருசில சொற்றொடர்கள் மூலம் தாக்கியுள்ளார்.

முதலாவதாக நாம் சுவடுகள்53ல் பாரிஸ் இலக்கியச் சந்திப்பு குறித்த விமர்சனத்தில் உங்களைத் தனிப்பட்ட முறையில் ஒரு தாக்குதலாகக் கருத்தை முன்வைக்கவில்லை. உங்கள் 'புளொட்'டுடனான வாழ்வும், அது தொடர்பாக (இது தொடர்பாக நாம் இன்றுவரை விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை) நாம் சுட்டிக் காட்டவில்லை.

நாம் குறிப்பிட்டது நீங்கள் கூறிய "எதிரும் புதிருமான பல்வேறு ஈழப் போராட்ட ஆதரவுக் குழுக்களைச் சேர்ந்தவர்களும் ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் பங்குபற்றிய முதல் நிகழ்வு" என்பதையே விமர்சித்தோம். அ-து ஈழப் போராட்ட குழுக்களின் அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலைத்துறையுடன் தொடர்புடையவர் என்று கேள்விப்பட்டிருந்தேன். அதனால் அவரது கடுஞ்சினம் படிந்த (சுவடுகளால் தணிக்கை செய்யப்பட்ட) கடிதமும், அவர் எனது விமாசனத்தை எதிர்கொண்ட விதமும் என்னை மிகவும் ஆச்சரியப்படுத்தின. விமர்சகர் ரவிக்குமார் குறிப்பிட்டதுபோல் ஒவ்வொருநாடுகளிலும் "விரல்விட்டு எண்ணுமளவே" கலைஞர்கள் இருப்பதால் "நீ சொன்னால் காவியம்" என்ற நிலையே நமது கலைஞர்கள் மத்தியில் உருவாகிவருகிறது. விமர்சனம் என்ற விசயம் இருப்பதே தெரியாமல் இங்கு கலைகள் தாம்விரும்பிய போக்கில், விகாரமாக வளர்கின்றன. விமர்சனம் என்பது பாராட்டுதல் என்றே அர்த்தப்படுகின்றன. குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுதல் அக்கிரமம் என்று கொள்ளப்படுகின்றன. எமது சிதறுண்ட வாழ்வு நமது கலைப்பரப்பில் ஏற்படுத்திய சீரழிவு இது.

"கர்நாடக சங்கீதத்தினாலும், பரதநாட்டியத்தினாலும் மட்டுமே ஒரு நாட்டிய நாடகத்தை உருவாக்க முடியுமா?" என்று ஒரு விடயம், ஆரோக்கியமாகவும், பயனுள்ளதாகவும் விவாதிக்கப்படக்கூடிய ஒரு நல்ல சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் ஆத்திரம் முக்கியப்படுத்தப்பட்டதனால், அதுபோன்ற ஆரோக்கியமான விடயங்கள் கவனிக்கப்படவில்லை.

வீடியோ ஒரு முற்றிலும் வேறுபட்ட ஒரு ஊடகம்: அரங்கத்தில் பார்க்கவேண்டிய ஒரு நாடகத்தை வீடியோவில் பார்த்து மதிப்பீடு செய்தல் இயலாது என்பதை வாசுகி போன்ற முடிவாக, நோர்வேத் தமிழ்க் கலைச் சூழல் மிகவும் நோய்வாய்ப்பட்டிருக்கிறது என்று என்னால் கவலைப்படவே முடிகிறது!

● -கண்ணன்

## நாற்சந்தி

ஆசிரியர்,
சுவடுகள்.

நெடுநாளாகவே சுவடுகளைத் தரிசிக்க வேண்டும் என்று எனக்குள் ஆவல் இருந்தது. பல இலக்கிய நண்பர்களிடமும் விசாரித்தபடிதான் இருந்தேன். இப்போது கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று கடல்கடந்து அந்நிய மண்ணில் கால்பதித்து - பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பல காத்திரமான சஞ்சிகைகள் வெளிவருவதையிட்டு இங்கு நாங்கள் அடிக்கடி பேசிக் கொள்வதுண்டு. இந்த முன்மாதிரி முயற்சியை எப்படித்தான் பாராட்டினாலும் அது இதற்கு ஈடாக முடியாது.

● நற்பிட்டிமுனை
.·.பளீல்,

எப்படி ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியும். எனவே கேள்வி எழுப்பினோம். அங்கு ஜனநாயகம் இருக்கவில்லை என்றோம்.

அதற்கு நீங்கள் உங்கள் வாழ்வு புளொட்டுக்குள் 1986வரை இருந்தது எனவும், வெளிவட்டத்தில் இருந்தீர்கள் எனவும், பரந்துபட்ட இளைஞர்களது பங்குபற்றுதலைக் கொண்டதாகவும், முஸ்லிம் இளைஞர்கள் சம்பந்தப் பட்டதாகவும் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

பரந்துபட்ட இளைஞர்கள், வெளிவட்டமும் இன்று புலிகளில் இல்லையா? அன்று புளொட்டில் இருந்தது போல் புலிகளிலும் உள்ளது. இன்று இல்லை என்ற கருத்துப்படக் கூற முன்வருவது ஏனெனில் அன்னைய புளொட்டையும் நியாயப்படுத்தவுமே. பரந்துபட்ட இளைஞர்கள் இருப்பது சரியான இளைஞர்கள் உள்ளது சரியான அரசியல் அல்ல. என்ன செய்வது என்பதே பிரச்சனை. இதிலிருந்தே எதைப் பிரதிபலித்தனர் என்பது புரியும்.

1986வரை புளொட் புலிகள் தடைசெய்யும் வரை காத்திருந்த ஜெயபாலன் எதைச் சாதிக்க முனைந்தார். 1985க்கு முன் சிலரும், 1985ன் ஆரம்பத்தில் தீப்பொறியும், 1985ல் பலரும் புளொட்டை விட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒதுங்கினர். ஆனால் புளொட் தடை செய்யப்படும்வரை ஜெயபாலன் அத்துடன் இருந்தவர்.

புளொட்டுக்குள் ஜெயபாலன் முரண்பாடு கொண்டிருந்தார் என்பது உண்மையே. அது எப்போதும் ஜனநாயகத்தின் பேரால் அல்ல. மாறாக சிவராம், சந்ததியார் போன்றோருக்கு மாற்று அரசியற் தலைமையாக அங்கீகரிக்கக் கோரியே. புலிகளில் நித்திகூட முரண்பட்டார். ஏனெனில் பாலசிங்கம் லண்டன் வாழ்வை முற்றாகக் கைவிட்டு இந்தியாவில் நிரந்தரமாகத் தங்க முற்பட்டபோது, யார் புலிகளின் அரசியற் பிரமுகர் என்பதிலேயே முரண்பட்டனர். அதில் நித்தி தோற்றார்.

ஏன் விமலேஸ்வரன் 1984ன் இறுதியில் விலகி ஜனநாயகத்திற்காகப் போராடினான். இதே ஜனநாயகத்திற்காக புளொட்டுக்குள் ஜெயபாலன் போராடினார் என்பது ஒரு வேடிக்கை அல்லவா? ஜனநாயகக் குரல்கள் தீப்பொறி வடிவிலும், தள மாநாட்டின் ஊடாகவே வெளிப்பட்டன. புளொட்டுடன் முரண்பட்ட 500க்கு மேற்பட்டோர் சவுக்குத் தோப்புக்குள்ளும், எம் மண்ணிலும் பலியிடப்பட்டனர். மிகுதிப்பேர் 1985ல் விலகத் தொடங்கிவிட்டனர். அமைப்பை புலிகள் கலைக்கும்வரை காத்திருக்கும் புத்திஜீவிகளை என்ன என்று சொல்வது?

புளொட்டுக்குள் நடந்த ஜனநாயகப் குற்றச்சாட்டுகளை இதற்குப் பதிலாக வைப்பதிலும் நம்பிக்கை அற்றவன். எதிர்தரப்பு அரசியலுக்கு சில அவதூறுகளை முன்வைப்பதிலும் நம்பிக்கை அற்றவன்.

நான் மண்ணை நேசிக்கிறவன். ஒரு புரட்சி நடைபெற வேண்டும் என்று விரும்புபவன். அந்த வகையில் மக்களை அணிதிரட்ட முயல்பவன். அதனால் எந்தத் தரப்பு, என்ன நோக்கில், என்ன அவதூற்றை வைத்தாலும் அதற்கு நான் எங்கும் எப்போதும் பதிலளிக்கத் தயாராய் உள்ளேன். பிரச்சனையில் இருந்து விலகாது திசைதிருப்பாது அப்பிரச்சனையை நேரடியாகவும் விவாதிக்கவும் தயாராக உள்ளவன்.

உங்கள் விமர்சனம் எந்த விதத்திலும் மாக்சிய வழிப்பட்டது அல்ல. தனிப்பட்ட தாக்குதலாகச் செய்துள்ளீர்கள். சுவடுகள் 53ல் எமது விமர்சனத்தையும், சுவடுகள் 54ல் ஜெயபாலனது விமர்சனத்தையும் ஒப்பிட்டு எது மாக்சிய ஆய்வு என்பதை வாசகர்களே பாருங்கள்.

நான் என்எல்எஃப்ரியில் இருந்தவன். அத்துடன் மத்திய குழுவிலும் இருந்தவன். புளொட், புலிகள் போன்ற இயக்க (மொத்தமாக) அரசியலுக்கு எதிராகப் போராடியவன். அந்த வகையில் பல்வேறு வெகுஜன அமைப்புகளிலும், அதன் என்றனர்.

1985ல் நாம் இருந்த வீடு இயக்கம் கொள்ளையடித்தே பணத்தில் கட்டியது எனப் பிரச்சாரம் செய்யப் பட்டது. ஆனால் நாம் இருந்த வீடு வாடகை வீடு. இன்றுவரை எனது குடும்பத்துக்குச் சொந்த வீடு கிடையாது.

ஜெயபாலன் புதிதாகக் குற்றச்சாட்டுகளை அடுக்கியுள்ளார். நான் கொழுத்த சீதனம்கொடுத்தது என்கிறார். ஆனால் எனது மகளுக்கு இரண்டு வயது. எனது தங்கையின் திருமணம் காதல் திருமணம்; சீதனம் அற்ற திருமணம். திருமணம் நடந்தபோது நான் புலிகளின் வதைமுகாமில் இருந்தவன். நான் இறந்துவிட்டேன் என்ற முடிவின்பின் இத் திருமணம் நிகழ்ந்தது. இப்படி ஒவ்வொன்றாகக் கூறமுடியும். ஆனால் இதுகூட ஆய்வுமுறை அல்ல.





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போராட்டங்களில் நாம் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவினோம். இந்த வகையில் தீப்பொறி முதல் சந்ததியார் கொலைவரை நாம் மண்ணில் அவர்களுக்காகப் போராடினோம். தளமாநாட்டில் உங்கள் பாத்திரம் என்ன? நாம் அவர்களுடன் ஒன்றுபட்டு நின்றோம். உங்களுடன் நான் பல தரம் புளொட்டின் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்து விவாதித்தபோது நீங்கள் அதை நியாயப் படுத்தினீர்கள்.

இனி எனக்கெதிராக ஒரு குற்றச்சாட்டை இப்படி வைத்துள்ளீர்கள்.

"ஊரார் பணத்தையும், இயக்கத்தையும் கொள்ளையடித்ததையும் மட்டுமே தனது சாதனையாகச் சொல்லக்கூடிய ஒருவரைப் பற்றி, கொள்ளைப் பணத்தில் பூர்சுவாச் சீதனம் கொடுத்து, உறவினர்களை மேல்நாட்டுக்கு அனுப்பியதை மட்டும் தனது செயற்பாடுகளாகச் சொல்லக்கூடிய ஒருவரைப் பற்றி...." எனக் குறிப்பிட்டு அடுத்த வரியில் "றயாகரனுக்கு (சமர்) எனது ஆலோசனை இதுதான். இனியாவது மாக்சிய அடிப்படைகள், அரசியல் சமூக பொருளாதார வரலாறு.."களைப் பொறுமையாகக் கற்றுக் கொள்ளக் கோருகிறார்.

நான் தனிநபர் பயங்கரவாதத்தில் நம்பிக்கை அற்றவன். அதுபோல் எதிராக் தலைமையிலும் இருந்து போராடியவன். என்எல்எ∴ப்ரி, தீப்பொறி போன்றனவும் அவ்வியக்கத்தில் இருந்தவர்களும் என்ன செய்தனர் என்பதை நான் மீண்டும் சொல்லத் தேவையில்லை.

இவரின் அவதூறுக்கு ஆதாரமே கிடையாது. அவரின் கவிதைபோல் தொடுத்தவையே. இன்னும் நாலு வரியைச் சேர்த்துச் சொல்லியிருப்பின் எல்லாவகையான, ஒரு மனிதனுக்கு எதிரான அதிகூடிய குற்றச்சாட்டை முன்வைத்திருக்கலாம்.

நான் இதுபோன்ற குற்றச்சாட்டுகளைப் பல தரம் சந்தித்தவன். 1985ல் பல்கலைக்கழகத்தில் ராகிங்கை எதிர்த்தபோது மனநோயாளி என என்னைக் குறிப்பிட்டுத் துண்டுப் பிரசுரங்கள் ஆயிரக்கணக்கில் விநியோகித்ததுடன், ஈழநாடு முதல் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தன. 1987ல் புலிகளில் இருந்து தப்பி வந்தபின் பல்கலைக்கழக மேடையில் திலீபன், மாத்தயா இருவரும் என்னைச் சமூகவிரோதி என அறிவித்தனர். அதுவும் பத்திரிகைகளில் வந்தது. 1986ல் விஜிதரன் போராட்டத்தின் போது பல்கலைக்கழக மேடையில் வை.முரளியும் (புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்) திலீபனும் என்னைச் சதிகாரன் துரோகி

என்எல்எ∴ப்ரியின் ஆரம்பமுதல் அமைப்பு சிதறும்வரை அதன் கணக்கு வழக்குகளை எழுத்தில் கொண்டிருந்தது. இது 1983 – 1984க்கிடையில் மூன்றுமுறை கணக்கு சரிபார்க்கப் பட்டது. அத்துடன் ஒவ்வொருமுறையும் அதன் போட்டோ கொப்பி இந்தியா – இலங்கை என இரு இடத்திலும் இருந்தது. பின் பிஎல்எ∴ப்ரி உடைந்தபோது அவர்களிடமும் ஒரு கொப்பி இருந்தது. இன்று அக்கொப்பிகள் உள்ளதுடன் அதன் பல பிரதிகள் பலரிடத்தும், பிஎல்எ∴ப்ரியிடமும் உள்ளன.

ஒருவன் குற்றச்சாட்டை வைப்பதாயின் கணக்கு வழக்குகளில் இருந்து ஆதாரத்துடன் முன்வைக்க வேண்டும். அதுவே குறைந்தபட்சம் முதலாளித்துவ வழியும்கூட. மாக்சியப்படி இதை ஆய்வு செய்ய வேண்டின் நான் அக்காலத்தில் என்ன செய்தேன் என்பதையும் வைத்தே ஆய்வு செய்ய வேண்டும். குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் இந்தவகையில் வைப்பின் நான் எப்போதும், எங்கும் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

இற்றைவரை மாற்று அரசியலுக்கு இதுபோன்று குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் யாரெனில் புளொட், புலி அரசியல்காரரே. மாற்று அரசியல் கொண்ட, கருத்து முரண்பாடு கொண்ட



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலரை புளொட், புலிகள் இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைத்தே அழித்தனர். இதைத்தான் ஜெயபாலன் செய்ய முனைகிறார். முடிந்தால் கணக்கு வழக்கு உள்ளதாய் ஆதாரத்துடன் குற்றச்சாட்டை வையுங்கள்.

இறுதியாக மாக்சியத்தைக் கற்றுக்கொள்ளக் கோரியுள்ளீர்கள். உண்மைதான், கற்றுக்கொள்ள நிறையவே உள்ளது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். நீங்கள் மாக்சியத்தைக் கற்றுக்கொள்ளக் கோருவதாலும், நாம் அதை ஏற்றுக் கொள்வதாலும் உங்கள் எழுத்துகள் மாக்சியமாகி விடாது.

உங்கள் எல்லாக் கவிதைகளும் மாக்சியக் கவிதைகள் அல்ல. மாறாக தேசிய எழுச்சியுடன் அரசு எதிராகவும், அதேநேரம் புளொட்டுக்கு எதிராக இருந்த இயக்கத்துக்கு எதிரான இயக்க அராஜகத்துக்கு எதிராகவும், அரசியலைப் பற்றியும் உள்ளன. மத்தியதரக் கனவுகளாக குட்டிபூர்ஷ்வாக் கவிதைகளாக வந்த இவை, தேசிய விடுதலைக்குள் இருந்த ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்காக வரவில்லை. இதனால்தான் மாக்சியக் கவிதை இல்லை என்கிறோம்.

உங்கள் கட்டுரைகளான முஸ்லிம் மக்கள் பற்றியதும், சாதி அமைப்பு பறறியதுமான இவைகூட மாக்சியக் கட்டுரைகள் அல்ல. மாறாக வெறும் தகவல்களே. இக்கட்டுரையிலும் கவிதைகளிலும் மாக்சிய விரோதப் போக்குகள் உள்ளன. ஆய்வு என்பது முன்னையதை மீளத் தொகுப்பது அல்ல. மாறாக மாக்சிய அடிப்படையில் அதை விமர்சித்து, அதற்குத் தீர்வும் வைத்து, அம்மக்களுடன் இணைந்து வேலை செய்து முன்வைப்பதே ஒரு ஆய்வாகும். இல்லாதவரை வெறும் தககலாகவும், முன்னையதை மீளத் தொகுப்பதுமே ஆகும்.

● பி.றயாகரன்

## அயனெஸ்கோ மறைந்தார்!

*உலகின் புகழ்பெற்ற நாடக மேதைகளில் ஒருவரான யூஜின் அயனெஸ்கோ (Eugene Ionesco) அண்மையில், தனது 81வது வயதில் பாரிஸில் மரணமானார்.*

*நாற்பது வருடங்களுக்கு முன் தோன்றிய அபத்த நாடகங்களின் ஆரம்பப் படைப்பாளிகளில் ஒருவராக விளங்கிய அயனெஸ்கோ, 1912 நவம்பர் 26ல் ரூமேனிய நகரான ஸ்லாட்டினாவில் (Slatina) வழக்கறிஞர் ஒருவருக்கும், அவரது பிரெஞ்சுத் துணைவியாருக்கும் மகனாகப் பிறந்தவர்.*

*சிறுவயதில் லக்சம்பேர்க்கில் தனது வாழ்வைக் கழித்த அயனெஸ்கோ, அங்கு மாலைகளில் நிகழ்ந்த பொம்மலாட்டங்களைப் பார்வையிடுவதை முக்கிய பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். இதுவே அவரது நாடக ஆர்வத்திற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.*

*தமிழில் ஓரிரு அபத்த நாடகங்கள் (உ.ம்: அண்மையில் கொழும்பிலும், ஒஸ்லோவிலும் மேடையேறிய 'அபசுரம்') தோன்றினாலும் அபத்த நாடகவகை தமிழில் பெரியளவில் வெற்றி தரவில்லை என்றே கூறலாம்.*

*– சிவன் –*

STOLAHNE
av Ionesco



ODD FURØY•HENNY MOAN
NIELS PETER UNDERLAND

**Furøys fleksibilitet og humor er strålende skuespillkunst.**

For her utfolder galskapen seg. Og i den er det mange sannhetskorn og

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

38 பக்கம் தொடர்ச்சி....

நிலவுவது பயங்கரவாதம்! பயங்கரவாதம்!! என்று பொச்சடித்து வருவதால் கிழக்கு, தெற்கிலுள்ள தமிழர்களின் வாக்குகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. வந்தாலும் வந்தது இம்முறைத் 'தேர்தல் திருவிழா' அரசை தர்மசங்கடத்தில் மாட்டிவிட.

இம்முறை தேர்தல் திருவிழாவும் வழமை போல மழைதண்ணியெண்டு எதையும் கொண்டுவரப் போவதில்லை என்றாலும் பாராளுமன்றத்திற்குள் இனப்பிரச்சனையைத் தீர்த்து விடலாமென்ற நம்பிக்கையில் இன்னும் தவம் கிடக்கின்ற தமிழ்க் கொக்குகளுக்கு பல bad newsகளையும் தராமல் இதுபோகாது. ஒன்றுமே செய்ய முடியாமல் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைக்கு வந்தால் பழைய பல்லவியைத் தவிர வேறு எதையும் பாடாது. பெரும்பான்மைத் தேசிய இனம் சிறுபான்மைத் தேசிய இனங்களில் தங்கியிருக்கக் கூடாது என்ற தடிப்பு அரசை விடாது.

புலிகளின் பக்கமும் பல கரச்சல்கள் இருக்கிறபடியால் ஆளிழுப்பு வேலையைவிட புலிகளுடன் பேச்சுக்குப் போவதையே அரசு விரும்பக் கூடும். இம்முறை மாத்தயா கோஷ்டியினரின் உள்விவகாரம் (தலைமைப் போட்டி) வீரத் துண்டைப் போட்டு முடிவிட முடியாத அளவுக்கு உடைப்பாக இருக்கிற படியால் யுத்தத்தை நீட்டிக்கொண்டு போக பிரபாகரன் பக்கம் விரும்பாது. சிலவேளை இந்தத் தேர்தல் திருவிழா ஒரு யுத்த உறக்கத்தைக் கொண்டுவந்தாலும் வரலாம். ஆனால் இந்தச் சமாட்டல் வேலைகள் அடுத்த தேர்தல் திருவிழா வரைக்குமாவது நீடிக்குமா என்பது பொறுத்த கேள்வியே. 46 வருடங்களாக தேர்தல் திருவிழாக்களில் வாங்கிவராத 'பா(வ)ப்பிள்ளை'களையா கொண்டுவந்து எங்களைப் பிராக்காட்டப் போகிறார்கள் - பாப்பம் என்று வரலாறும் இருந்துவிடாது சும்மா.



www.tamilarangam.net







வியர்வையில் விளைந்த நிலங்கள்
குருதியில் சிவக்க
வீழ்ந்த பிணங்கள்
வெய்யிலில் காய்ந்து
கருமையாக....
பருந்துகள் வட்டமிட்டன
சிரித்தன,
தரையில் காத்துக் கிடக்கும்
மாமிச மலையைப் பார்த்து...
மாம்பழ ருசியை
மறந்துவிட்ட காக்கைகளும்
அதனுடன் போட்டிபோட்டு....

ஈக்கள் வடக்கை நோக்கிப்
படையெடுத்தபோது
தெற்கில் வாந்திபேதி
ஊசிகள் காய்ந்துபோயின
சுடுகாடு இடம்பெயர்ந்து
தெருக்களெல்லாம் புழுக்கள்
ஊர்ந்து போயின
பிணவாடையில்
தேனீக்கள் பூவாடை மறந்து
தடுமாறின.
அழுகிய பிணத்தில் அலுத்து
நாளை விழப்போகும்
பிணத்திற்காக
நாயொன்று ஊர் ஒரம்
காத்துக் கிடந்தது.

குழல் துப்பாக்கிகள்
இன்றும் புகைகக்கியபோது
நடமாடும் மாமிசங்கள்
நடையிழந்து நிலத்தில்
ஊரோரத்து நாய்களுக்கு
சுடும் உணவாக.....
சுடுகாடுகள் பெருத்து
நடமாடும் மாமிசங்கள்
ஒழிந்தபோது
நாய்கள் அடித்துக்கொண்டன
நாளை வரப்போகும்
உணவுப் பஞ்சத்திற்காக......!

*துஷ்யந்தன்*

SUVADUGAL, A Tamil Monthly from Norway, Issue nr 55, March'94, (Estd: Sept'88). Herslebs gt43, 0578 Oslo.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்